ஸ்ரீ:॥

ஸ்ரீமதே நாராயணாய நமஃ ॥

ஸ்ரீவிகநஸ மஹாகுரவே நமஃ ॥

ஸ்ரீ வைகானஸம்

மாத பத்திரிகை



ஸ்ரீ விகனே முனீந்த்ரஃ

மாலை:2 ஸ்ரீ விக்ரம வருஷம் சித்திரை மாதம் மலர்: 3

Vol.2 No.3 April 2000

வருட சந்தா ரூ.60.00 தனி இதழ் விலை ரூ. 5.00

த்வாதஶ மாஸார்ச்சனம்

N.S. பார்த்தஸாரதி பட்டாச்சாரியார், ஆசிரியர், ''ஸ்ரீவைகானஸம்''

சைத்ர மாஸார்ச்சனம்

தமிழ் வருஷக் கணக்கில் ஸௌரமானம் என்றால் ஸூர்யன் ஒரு ராசிக்கு மாறும் பொழுது அந்த மாசம் பிறக்கும் என்று நிர்ணயித்து ஸூர்யகதியை வைத்து கணக்கிடுவதாகும். சாந்த்ரமானம் என்றால் சந்த்ரனின் வளர்ச்சியை முன்னிட்டு ப்ரதி அமாவாஸ்யைக்கு மறுநாள் ப்ரதமையன்று மாசம் ஆரம்பித்து அடுத்த அமாவாஸ்யையன்று முடியும். பௌர்ணமியன்று பொதுவாக இருக்கும் நக்ஷத்ரத்தை அந்த மாசப்பெயர்கள் அமைந்துள்ளன. ஸௌரமானத்தில் ஸூர்யன ப்ரவேசித்து 1 மாஸம் மேஷராசியில் இருப்பதால் அந்த மாஸம் மேஷமாஸம் (தமிழில் சித்திரை) என்று அமைந்துள்ளது.

ஸம்வத்ஸராதி அல்லது யுகாதி என்று கலியுகம் ஆரம்பித்த நாளை நினைவுபடுத்தும் வகையில் புது வருஷப்பிறப்பை குறிக்கின்ற நாள் யுகாதி. இது சைத்ரமாஸத்தின் முதல் நாளாகும் ஸூர்யன் மேஷ ராசியில் ப்ரவேசிக்கும் காலம் விஷ்ணுபுண்யகாலம் இம்மாதத்தின் ஆரம்பநாளாகும். சித்ரா பௌர்ணமியன்று சித்ரா நக்ஷத்ரம் ஸம்பவிப்பதால் சைத்ரம், சித்திரை என்று இம்மாதப்பெயர்.

யுகாதியன்று திருப்பதி, திருவல்லிக்கேணி முதலான பல திவ்ய தேசங்களில் புது பஞ்சாங்க ஶ்ரவணம் செய்விப்பது குறிப்பிடத்தக்கது யுகாதியன்றும் தமிழ் (ஸௌரமான) வருஷப்பிறப்பான விஷு எனப்படும் சித்திரை 1 ஆம் தேதியன்றும் பெருமாளுக்கு ஸ்நபநம், உத்ஸவங்களைச் செய்வது பல தேசங்களிலும் வழக்கத்திலுள்ளது. கண்டிப்பாக செய்ய வேண்டியதும்கூட. (விஷுபுண்யகாலம், ஸங்க்ரமண காலங்களில் பெருமாளுக்கு உத்ஸவம் ஸ்நபநம் செய்யவேண்டும் என மஹர்ஷிகள் விதித்துள்ளனர்.

சித்திரை வைகாசி மாஸங்கள் வஸந்தருதுவான படியாலே மரங்கள் செடிகொடிகள் பூத்துக்குலுங்கும்.

எம்பெருமானை சித்திரை மாதத்தில் ஸுகந்தமான புஷ்பங்களால் அலங்கரிப்பவன் வருடமுழுதும் புஷ்பாலங்காரம் செய்த பலனை அடைகிறான்.

சித்ரா பௌர்ணமி எம்பெருமானுக்கு 32 உபசாரங்களையும் விசேஷமாக செய்து உத்ஸவம் ஸ்நபநம் (திருமஞ்ஜநம்) செய்து ப்ரபூதம் அளவு தளிகைகள் (ப்ரபூதம் என்பது 8 படிக்குமேல் 24 படிக்குள்) திருக்கண்டருளப்பண்ணி வாழை, மா, பலா என்ற முக்கனிகளை நிறைய நிவேதனம் செய்து ஸுகந்தமான பூமாலைகளால் பெருமாளையும் தேவியரையும் அலங்கரித்து ப்ரபை, மண்டபம் ஆகியவற்றை புஷ்பத்தால் அலங்கரித்து பெருமாளை அந்த ப்ரபையிலே ஏள்ளப்பண்ணி நாட்யம், கானம், வாத்யம் ஆகியவற்றால் பெருமாளை உகக்கச் செய்ய வேண்டும்.

வஸந்தகாலம் முடியும்வரை நித்யம் மேற்கண்டவாறு பெருமாளுக்கு செய்வது மிகவும் விஶேஷமானது என மஹர்ஷி குறிப்பிடுகின்றனர்.

தவனோத்ஸவம்: சித்ரா பௌர்ணமியன்று பெருமாளுக்கு தவனோத்ஸவம் செய்யவேண்டும் என ஸ்ரீபருகுமஹர்ஷி க்ரியாகாரத்தில் 18வது அத்யாயத்தில் குறிப்பிடுகிறார்.

சென்ற தைமாத இதழின் இணைப்பாக வெளிவந்த அத்ரிமஹர்ஷி க்ரந்த வித்வத்ஸதஸில் வித்வான் ஸ்ரீ உ.வே.V.S. கோபால பட்டாச்சார்ஸ்வாமியின் உரையில் பெருமாள் திருமுன் மஹாமேரு அமைக்கும் முறையை

இதன் தொடர்ச்சி பின் அட்டையின் உள்புறம்...

ஸ்ரீஃ ॥

ஸ்ரீவிகநஸ மஹா குரவே நமஃ ॥



ஸ்ரீவைகானஸம்

மங்களாஶாஸநம்

ஸ்ரீவைகாநஸ பத்ரிகா விகநா கருணோத்திதா ।
ஸ்ரீநிவாஸ கடாக்ஷேண ஜீயாதாசந்த்ர தாரகம் ।
ஸ்ரீவைகாநஸ பத்ரிகா ஸ்ரீஶஸ்ய ப்ரியயா ஸஹ ।
வைகாநஸாநாம் ஸர்வேஷாம் கேஹே கேஹே
ஸதா வஸேத் ॥

ஸ்ரீமத் விகநஸாசார்யருடைய கருணையினால் உண்டாகி யிருக்கும் இந்த ஸ்ரீவைகாநஸ பத்திரிகை ஸ்ரீநிவாஸனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தினாலும் சந்திரன் நக்ஷத்திரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது. ஸ்ரீவைகாநஸர்கள் அனைவருடைய க்ருஹங்கள்தோறும் இந்த ''ஸ்ரீவைகாநஸம்'' பத்திரிகை ஸ்ரீமந் நாராயணனுடைய ப்ரியையான ஸ்ரீமஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக் கடவது.

ஆசிரியர்
N.S. பார்த்தஸாரதி பட்டாச்சாரியார் D.E.E.,

இணை ஆசிரியர்
D. மோகன் பட்டாச்சாரியார், M.A.,

வெளியிடுவோர்:
AKS டிரஸ்ட்

24, எல்லையம்மன் கோவில் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.
Ph: 044-4710036 Email : MOHAND@eth.net

மாலை: 2 ஸ்ரீ விக்ரம வருஷம் சித்திரை மாதம் மலர்: 3

ஸ்ரீஃ

விஷய ஸூசிகை

ஆசிரியர் உரை 5

பஞ்சாங்க ஸங்க்ரஹம், தர்ப்பண ஸங்கல்பம் 6

ஸ்ரீவைகானஸ கல்பஸூத்ரம் 7

திவ்ய தேசங்கள் 9

உத்ஸவாதி விவரங்கள் 10

ஸ்ரீ புருஷஸூக்த வ்யாக்யானம் 11

மருத்துவக்கட்டுரை 13

கேள்வி பதில் 14

ஸ்ரீ வைகானஸத்தில் அநபாயினன் 15

மணமாலை 16

மணிஷசை 19

ஸ்ரீ வைகானஸ பகவத் ஶாஸ்த்ர முத்துக்கள் 20

அம்மாமிக்கு அன்புடன் 21

வடமொழி அகராதி 23

இந்த மாத ப்ரபலம் 25

வாசகர் கடிதங்கள் 26

தையற்கலை 27

சிறுவர் பகுதி 29

குறுக்கெழுத்துப்போட்டி 31

இப்பத்திரிகைக்கு வரும் வாசகர் கடிதங்கள், கட்டுரைகள், கருத்துக்களை தொகுக்கவோ, சுருக்கவோ, ஒதுக்கவோ ஆசிரியர் குழுவுக்கு முழு அதிகாரம் உண்டு.

இப்பத்திரிகையில் வெளியாகும் கட்டுரைகள், மற்றும் வாசகர் கேள்விக்கான பதில்கள் வித்வான்கள் மற்றும் எழுத்தாளர்களின் சொந்தக்கருத்தாகும். இவற்றால் உண்டாகும் விளைவுகளுக்கு AKS டிரஸ்ட் மற்றும் ஆசிரியர் குழு பொறுப்பேற்காது.

மணமாலை பகுதியில் வெளியாகும் வதூ/வரன் குறித்த செய்திகள் பத்திரிகைக்கு கடிதம் மூலம் பெற்றவையே- வதூ/வரன்களைப் பற்றி தீர விசாரித்துச் செயல்படவும். இதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு AKS டிரஸ்ட் மற்றும் ''ஸ்ரீவைகானஸம்'' பத்திரிகை பொறுப்பேற்காது.

உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?
உடனே புதுப்பிக்கவும்.

ஆசிரியர் உரை

ஸ்வாமிகள் ஸன்னிதியில் விஜ்ஞாபனம்.

ஸ்ரீவிக்ரம எனும் பெயரைத் தாங்கிவரும் இப்புது வருடம் குலஸ்வாமிகள் அனைவருக்கும் ஸர்வ கார்யங்களிலும் ஜயத்தைக் கொடுக்கக் கூடியதாக அமையும் என்பதில் நமக்கு துளியும் ஐயமும் இல்லை.

அனைவருக்கும் ஸ்ரீவிக்ரம வருஷப் பிறப்பை முன்னிட்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாசக ஸ்வாமிகளின் பேராதரவாலும், ஆசிகளாலும், நம் இதழ் இவ்விக்ரம வருஷத்தில் மேலும் பல விஜய த்வஜங்களை ஸ்தாபிக்கும் என நம்புகிறோம்.

வாசக ஸ்வாமிகள் வழக்கம் போல் நம் இதழைப் பற்றி கருத்துக்களை எழுதி பதேபதே ஸ்ரீமுகம் க்ருபை செய்ய வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

சந்தா முடிவடையும்போது அதற்குள் அடுத்த வருட சந்தாக்களையும் M.O / D.D நேரில் செலுத்தி அடியோங்களை கைங்கர்யத்தில் ப்ரோத்ஸாஹப் படுத்தவேண்டுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

இப்படிக்கு
ஆசிரியர் குழு

செய்தி

ஸ்ரீவைகாநஸ ஞான வேள்வி ஆஹுதி 13 கடுக்கலூரில் 9-3-2000 அன்று நடைபெற்றது. ஸ்ரீ.உ.வே. S. ரகுவீரபட்டாச்சார் வரவேற்று பேசினார். சீர்காழி ஸ்ரீ உ.வே. சேஷாத்ரி பட்டாச்சார் தலைமை தாங்கினார். ஸ்ரீ உ.வே. மணிவண்ண பட்டாச்சார் ஸ்ரீ.உ.வே. ஸ்தலசயனபட்டாச்சார், ஸ்ரீ உ.வே. துவாரக நாதபட்டாச்சார், சிர. ஸ்ரீ. சுந்தரவரத பட்டாச்சார் சிர. ஸ்ரீ. தேஹளீச பட்டாச்சார் ஆகியோர் கலந்து கொண்டனர். உபயம் ஸ்ரீ. வெங்கட ரமண பட்டாச்சார் & ஸ்ரீவாசுதேவ பட்டாச்சார், கடுக்கலூர்.

ஸ்ரீவைகாநஸ ஞான வேள்வி ஆஹுதி - 14 வல்லத்தில் 11-3-2000 அன்று நடைபெற்றது. ஸ்ரீ. உ.வே. S. ரகுவீரபட்டாச்சார் வரவேற்று பேசினார். புரிசை ஸ்ரீ. உ.வே.ஸ்ரீனிவாச பட்டாச்சார் தலைமை தாங்கி சந்தியாவந்தனத்தை செயல் முறை விளக்கத்துடன் செய்து காட்டினார். பின்பு கருத்தரங்கில், மருதாடு ஸ்ரீ உ.வே. வேங்கட வரதபட்டாச்சார், அனந்த கிருஷ்ண பட்டாச்சார், சுந்தரவரத பட்டாச்சார் ஆகியோர் பங்கேற்றனர். கலை நிகழ்ச்சியில் அம்ருத வல்லி, வைஷ்ணவி, ராஜலக்ஷ்மி, கேசவன் பங்கேற்றனர். உபயம், வல்லம் ஸ்ரீ சுந்தர வரதபட்டாச்சார், மருதாடு ஸ்ரீவேங்கட வரதபட்டாச்சார்.

வாசகர்களின் கவனத்திற்கு!

தங்களுக்கு வந்த புத்தக உரையின் மேல் உள்ள முகவரித்தாளில் CHANDA END CHITHIRAI 2000 என்று இருந்தால் உடனே தங்களின் சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

கலியுகாதி 5102 விக்ரம வருஷம் உத்தராயணம் வஸந்தருது சித்திரைமாதம்

April			
2000	சித்திரை	கிழமை	முக்கிய அம்சம்
13	1	வியா	வருஷப்பிறப்பு 3-15 P.M. IST
14	2	வெள்	ஸர்வஏகாதசி
18	6	செவ்	பௌர்ணமி
27	15	வியா	ஸ்ரவண விரதம்
30	18	ஞாயி	ஸர்வ ஏகாதசி
May			
1	19	திங்	திதித்வயம் (துவாதசித்ரோயதசி)
3	21	புதன்	ஸர்வ அமாவாஸ்யை அக்னி நக்ஷத்ரம் ஆரம்பம்
12	30	வெள்	திதித்வயம் (நவமி, தசமி)

தர்ப்பண ஸங்கல்பம்

கலியுகாதி 5102 சித்திரை மாதம் 1 ஆம் தேதி (13-4-2000) விக்ரம வருஷப் பிறப்பு. ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே ஸ்ரீ விக்ரம நாம ஸம்வத்ஸரே உத்தராயணே வஸந்தருதௌ மேஷமாஸே ஸுக்லபக்ஷே தஸம்யாம் ஸுபதிதௌ குரு வாஸரயுக்தாயாம் ஆஸ்லேஷா நக்ஷத்ர யுக்தாயாம் ஸ்ரீவிஷ்ணுயோக ஸ்ரீவிஷ்ணுகரண ஏவங்குண விஸேஷண விஸிஷ்டாயாம் அஸ்யாம் தசம்யாம் புண்யதிதௌ விஷ்ணுபுண்யகாலே காவேரீ மத்யே மேஷரவி ஸங்க்ரமண ஸ்ராத்தமதி லதர்ப்பண ரூபேண அத்யகரிஷ்யே.

சித்திரை மாதம் 21 ஆம் தேதி (3.5.2000) அமாவாஸ்யை

ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே ஸ்ரீவிக்ரமநாம ஸம்வத்ஸரே உத்தராயணே வஸந்தருதௌ மேஷ மாஸே க்ருஷ்ண பக்ஷே சதுர்தஸ்யாம் ஸுபதிதௌ ஸௌம்ய வாஸரயுக்தாயாம் அஸ்வினி நக்ஷத்ர யுக்தாயாம் ஸ்ரீவிஷ்ணுயோக ஸ்ரீவிஷ்ணுகரண ஏவங்குண விஸேஷண விஸிஷ்டாயாம் அஸ்யாம் சதுர்தஸ்யாம் புண்யதிதௌ தர்ஸ புண்யகாலே காவேரி மத்யே தர்ஸ ஸ்ராத்தம் திலதர்பணரூபேண அத்ய கரிஷ்யே.

ஸ்ரத்தாஞ்ஜலி

சென்ற மார்ச் 4 ஆம் தேதி சனிக்கிழமையன்று சென்னையடுத்த நசரத்பேட்டை, அகரம்மேல் கிராமத்தில் பச்சைவண்ணப் பெருமாள் கோயில் ஸ்ரீ.உ.வே. ராமானுஜ பட்டாச்சார் ஸ்வாமி ஆசார்யன் திருவடியடைந்தார். அன்னாரின் குடும்பத்தினருக்கு குலஸ்வாமிகள் சார்பாக அடியோங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீவைகானஸம் மாத இதழ்.

ஸ்ரீவைகாநஸகல்பசூத்ரம்

(சங்கேந்தி டாக்டர் S.முத்துபட்டர், விரிவுரையாளர்,
சம்ஸ்க்ருத பிரிவு, விவேகானந்தா கல்லூரி, சென்னை - 4)

ச்ரவணே ச்ராவணே சுக்ல பூர்ணிமா ஸோமவாஸரே।
ஸிம்மலக்னேன ஸம்யுக்தே பஜே நைமிச மாகதம் ॥

பதிநான்காவது ஸம்ஸ்காரம் - உபநயனம்

உபநயனம் என்றால் உப = ஆசிரியர் அருகில், நயதி = அழைத்துக் கொள்வது எனப்பொருள். இச் ஸம்ஸ்காரம் 14 வது ஸம்ஸ்காரமாக சூத்ரக்ரமத்தில் படிக்கப்பட்டு இருந்தாலும் (உபநயனஸ்ய ஸர்வ கர்மனாதிகாரித்வாத் ப்ரதமதஃ உபநயன ஸம்ஸ்காரம் விதீயதே) உபநயனம் செய்து கொண்டவர்களுக்குத்தான் அனைத்து கர்மாக்களிலும் அதிகாரம் உண்டு என்பதால், ஸம்ஸ்காரங்கள் செய்யும் முறையை விளக்கும்போது ஸ்ரீவிகநஸ முனி முதன் முதலில் உபநயன ஸம்ஸ்காரத்தை இரண்டாவது ப்ரச்னம் மூன்றாவது கண்டத்தில் விளக்குகிறார். கர்பாதானாதி வர்ஷே பஞ்சமே ப்ரஹ்மவர்ச்சஸகாமம் என்ற ஸ்ரீவிகநஸ சூத்ரத்தின்படி தன் குழந்தை நல்ல ப்ரஹ்ம தேஜஸ்ஸுடன் இருக்க வேண்டுமாயின் ஐந்தாவது வயதில் வஸந்தருதுவில் உபநயன ஸம்ஸ்காரம் செய்ய வேண்டும். ஆயுளை விரும்புபவர்கள் எட்டாவது வயதிலும், தனத்தை விரும்புபவர்கள் ஒன்பதாவது வயதிலும் வஸந்தத்தில் ப்ராஹ்மணனுக்கு உபநயனம் செயது வைக்கவேண்டும். இவ்வாறு முடியவில்லை என்றால் கடைசீ பக்ஷமாக 16 வயதிற்குள் உபநயனம் செய்துவைத்துவிட வேண்டும். பதினொன்றாவதுவயதில் க்ரீஷ்மருதுவில் ராஜாக்கள் (க்ஷத்ரியர்கள்) உபநயனம் செய்துகொள்ள வேண்டும். இவ்வாறு முடியவில்லை என்றால் 22 வயதிற்குள் கண்டிப்பாக உபநயனம் செய்துகொண்டே ஆகவேண்டும். பன்னிரண்டாவது வயதில் வைச்யர்கள் உபநயனம் செய்துகொள்ள வேண்டும். இவ்வாறு முடியவில்லை என்றால் 24 வயதிற்குள் கண்டிப்பாக உபநயனம் செய்துகொள்ள வேண்டும். ப்ராஹ்மணர்கள் 16 வயதைக் கடந்தும், க்ஷத்திரியர்கள் 22 வயதைக் கடந்தும், வைச்யர்கள் 24 வயதைக் கடந்தும் உபநயனம் செய்து கொள்ளாமல் இருந்தால் பிறந்தது முதல் தற்சமயம் நடக்கும் வயதுவரை புருஷனாக/ஆணாக பிறந்து ஸாவித்ரீ மந்திரத்தை கடைப்பிடிக்காததால் அவன் ஸாவித்ரீ மந்திரத்தை கடைப்பிடிக்கும் பக்குவத்திலிருந்தும் (ஸாவித்ரீ பதிதனாக) அதற்கு தகுதியில்லாதவனாகவும் ஆகிறான். ஆதலால் அவர்கள் உபநயனம் செய்துகொள்வதற்கு முன்பு ஒரு ப்ராயச்சித்தத்தை நமது ஸ்ரீவிகநஸ முனி விதிக்கிறார். இதற்குப் பெயர் உத்தாலகப்ராயச்சித்தம். இதைச் செய்வதன் மூலம் அந்தப்பையன் மறுபடியும் (புனர்ஜன்மம்) பிறவி எடுத்ததாகவும், அதன் பிறகே சாஸ்த்ரப்படி அவன் தர்மத்தை கடைப்பிடிக்கும் பக்குவமுடையவனாக ஆகிறான் என்பது சாஸ்த்ர உத்தேசம்.

உத்தாலக ப்ராயச்சித்தம்:

ஸாவித்ரீ பதிதனாக ஆகிய நான் உபநயனம் செய்து கொள்வதன் பொருட்டு இவ்வ்ரதத்தை மேற்கொள்கிறேன் என்று ஸங்கல்பித்துக்

கொண்டு, இரண்டு மாத காலம் யவான்னத்தை (கோதுமை அல்லது பார்லி எனக் கொள்ளலாம்) மட்டும் ப்ராண ரக்ஷணத்திற்காக மிதமாகச் சாப்பிட்டு ஜீவிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதன் பொருட்டு ஒரு மாத காலம் பால் மட்டும் மிதமாக/கொஞ்சம் கொஞ்சமாக அருந்தி உயிருடன் இருக்க வேண்டும். 15 நாட்கள் ஆமீக்ஷையை (அதாவது சூடான பாலில் தயிரை சேர்த்தால் திரிந்து போய்விடும் - அந்த பாலிற்கு ஆமீக்ஷை எனப் பொருள் - இதை ச்ரௌதத்தில் யாகங்களில் பயன்படுத்துகிறார்கள்) கொஞ்சம் சாப்பிட்டு ப்ராணனை ரக்ஷணம் பண்ண வேண்டும். எட்டு (இராத்ரி) நாட்கள் நெய்யை மட்டும் ப்ராஸனம் செய்து (ஆசமனம் போல் சாப்பிட்டு) ஜீவிக்க வேண்டும். உபநயன கர்மாவை விட்டுவிட்டு இத்தனை நாள் ஸம்பாதித்த தனத்தில் (மற்றவர்களிடம் தனம் கேட்காமல்) அனைவருக்கும் போஜன த்ரவ்யங்களை (எந்த நேரகாலங்கள் பாராமல்) ஆறு நாட்கள் கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். மூன்று நாட்கள் ஜலத்தை மட்டும் சாப்பிட்டு உயிர் வாழ வேண்டும். ஒருநாள் உபவாஸமிருக்க வேண்டும். (எதுவும் சாப்பிடாமல் இருக்க வேண்டும்). பையனுடைய தகப்பனார் தர்மத்தில் கூறியபடி ஸாவித்ரீ பதிதனான புத்ரனின் பொருட்டு சாந்த்ராயனம், ப்ராஜாபத்யம் ப்ராயச்சித்தம் செய்து (தானங்கள் செய்து) சாந்திவாசன மந்த்ரத்தால் ஸ்னானம் செய்து மறுபடியும் ஜாதகர்மா முதல் சௌளம் வரை ஸம்ஸ்காரங்களைச் செய்து முடிக்க வேண்டும். இவ்வாறு செய்தால்தான் 16 வயதை தாண்டிய ப்ராஹ்மண பையன் உபநயனம் செய்துகொள்ள அருகதையுடைய வனாக ஆகிறான். இங்கு நாம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால் கர்மாவை விட்டுவிட்ட பையன் மற்ற விஷயங்களில் ஈடுபட்டு காயத்ரீ மந்த்ரத்தை அனுஷ்டிக்கும் பக்குவத்தை இழந்து விடுகிறான். ஆகையால் அப் பக்குவத்தை அடைவதன் பொருட்டு செய்யப்படுவதுதான் இந்த உத்தாலகப் ப்ராயச்சித்தம் ஆகும். ஆதலால் 16 வயது முடிந்து உபநயனம் செய்துகொள்பவர்கள் இதைக் கடைப் பிடிப்பது மிகவும் முக்கியமாகும்.

ப்ரஹ்மசாரி முக்கியமாக எடுத்துக் கொள்ளக்கூடிய தண்டம் காயத்ரீ மந்த்ரம் ஆகியவை பற்றிக் கூறப்படுகிறது. ப்ரஹ்மணனான ப்ரஹ்மசாரிக்கு தண்டம் பலாசம்/புரசு அல்லது பில்வம் தலைவரை நீளமுள்ளதாகவும் (கேசாந்தம்), க்ருஷ்ணஸாரமானின் தோலும் (அஜினம்), மிஞ்சிபில்லை/மிஞ்சிகோரையை மௌஞ்ஜியை மேகலை யாகவும் (இடுப்பில் கட்டிக் கொள்ளும்படியுள்ள சூத்ரமாகவும்) உபநயனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். க்ஷத்ரியனாகில் நையக்ரோத / ஆலமரத்தின் தண்டம் நெற்றி வரை நீளமுடையதாகவும் (லலாடாந்தம்), ஸாதாரணமானின் (ரௌரவம்) தோலும், மௌர்வீ - வில்லின் ''நாண்'' ஏற்றக்கூடிய கயிரை மேகலையாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும். வைச்யனாகில் ஔதும்பர / அத்தி தண்டம் மூக்குவரை (நாஸிகாந்தம்) நீளமுள்ளதாகவும், பெரிதாக உள்ள ம்ருகத்தின் தோலும், சாணீ-சணலை/ஜனப்ரியை மேகலையாகவும் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த உபநயனம் ஸம்ஸகாரம் பற்றிய கட்டுரை அடுத்த இதழில் தொடரும்.

மங்களானி பவந்து **(தொடரும்)**

திவ்ய தேசங்கள் - 4

D. மோகன் பட்டாச்சார், M.A., இணை ஆசிரியர் ஸ்ரீ வைகானஸம்

திருஅன்பில்

இந்த ஸ்தலம் திருச்சி கல்லணை கும்பகோணம் - பஸ் மார்கத்தில் உள்ளது. லால்குடியிலிருந்து (பஸ் உண்டு) கிழக்கே 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. திருச்சியிலிருந்து இவ்வூருக்கு பஸ் வசதி உண்டு. அடிக்கடி பஸ் போவதில்லை. அதனால் திருச்சியிலிருந்து நடராஜபுரம் சென்று அங்கிருந்து சுமார் ¾ கிலோமீட்டர் நடந்து அன்பில் அடையலாம். இங்கு தங்கும் வசதிகள் கிடையாது. திருச்சியில் தங்கி விட்டு இங்கு வந்து சேவித்து திரும்பலாம். இது சோழநாட்டுத் திருப்பதியைச் சேர்ந்த ஸ்தலம்.

ஸ்தல புராணம்:

எம் பெருமான் ஸ்ரீமன்நாராயணன் பஞ்ச வ்யூக மூர்த்திகளாக அவதாரம் செய்து உலகத்தில் உள்ள சகல ஜீவராசிகளையும் சிருஷ்டித்து காப்பாற்றுகிறான். அந்த விதமான பஞ்ச வ்யூகமூர்த்தி ஸ்தலங்களில் ஒன்றான இத்திருத்தலத்தில் ஐந்தாவது மூர்த்தியான அனிருத்த மூர்த்தியாக அவதாரம் செய்து ஸ்ரீ ஸுந்தரராஜன் என்ற திருப்பெயருடன் விளங்குகிறார். தன்னுடைய நாபிக்கமலத்திலிருந்து தோன்றியப்ரம்மதேவருக்கு வேதமந்திரங்களை உபதேசித்து உலகை சிருஷ்ட்டி செய்கின்றார்.

இந்த ஸ்தலத்தில் வால்மீகி தபசிருந்து எம்பெருமானை தரிசித்தார். எனவே வால்மீகி க்ஷேத்திரம் என்ற பெயரும் உண்டு. ஒரு சமயம் ப்ரம்ம தேவரின் அசுவமேதயாகத்திற்கு உறுதுணையாக இருந்த சப்தரிஷிகளில் ஒருவரான குத்சர் என்ற மகரிஷி வேத மந்திரங்களை தப்பாக உச்சரித்ததால் வேத புருஷன் சாபமிட்டான். அதன் விளைவாக மண்டூக உருவம் (தவளை) அடைந்தார் மஹரிஷி. சாபம் நீங்க இந்த க்ஷேத்திரத்திற்கு வந்து இங்குள்ள புஷ்கரணியில் ஸ்நானம் செய்து 48 நாட்கள் ஸ்ரீசுந்தரராஜப் பெருமாளை தரிசித்து சாப விமோசனம் அடைந்தார்.

மூவலர்	:	வடிவழகிய நம்பி, புஜங்க சயனம், கிழக்கே திருமுகமண்டலம்
உத்ஸவர்	:	ஸுந்தரராஜன்
தாயார்	:	அழகியவல்லி நாச்சியார்
விமானம்	:	தாரக விமானம்
தீர்த்தம்	:	மண்டூகபுஷ்கரிணி, கொள்ளிடம்
ப்ரத்யக்ஷம்	:	ப்ரஹ்மா, வால்மீகி
ஆராதனம்	:	பாஞ்சராத்ரம்
மங்களாஸாஸனம்	:	திருமழிசையாழ்வார் - 1 பாசுரம்

சுபம் **தொடரும்**

உத்ஸவாதி விவரங்கள்

கலியுகாதி வருஷம் 5102 ஸ்ரீவிக்ரம வருஷம் சித்திரைமாதம்

சித்திரை	ஏப்ரல்	கிழமை	உத்ஸவம்
1-10	12-22	பு-ச	ஒப்பிலியப்பன் கோவில் ஸ்ரீராமநவமி பெருவிழா.
2	14	வெள்	திருவஹீந்த்ரபுரம் கருடசேவை
3,4	15,16	சனி,ஞா	ஒப்பிலியப்பன் கோவிலில் புத்ரகாம இஷ்ட ஜயப்ரத வேள்வி
3-5	15-17	ச-தி	மாயூரம் Dt. அம்பல் ஸ்ரீவீற்றிருந்த பெருமாள் மஹா ஸம்ப்ரோக்ஷண வைபவம்.
4-6	16-18	ஞா-செவ்	திருமலை திருப்பதி வஸந்தோத்ஸவம்
6	18	செவ்	திருமாலிருஞ்சோலை ஸ்ரீகள்ளழகர் வைகையாற்றில் இறங்குதல், திருக்கோஷ்டியூர், உத்தமர்கோவில், திருவஹீந்த்ரபுரம் திருத்தேர்
7	19	புத	கள்ளழகர் தங்க கருடசேவை திருவல்லிக்கேணி, திருநீர்மலை, திருவிடவெந்தை, ஸ்ரீபெரும்பூதூர், நாவல்பாக்கம், பட்டணம் கோவில் த்வஜாரோஹணம்
8	20	வியா	ஒப்பிலியப்பன் கோவில் ஸீதாகல்யாண வைபவம்
9	21	வெள்	ஒப்பிலியப்பன் கோவில் ஸ்ரீ ராமர் தீர்த்தவாரி, கனகாபிஷேகம் மற்றும் ஸ்ரீராமபட்டாபிஷேகம் திருவல்லிக்கேணி கருடசேவை
13	25	செவ்	திருவல்லிக்கேணி திருத்தேர்
15	27	வியா	சென்னை மயிலை ஸ்ரீமாதவப் பெருமாள் ப்ரஹ்மோத்ஸவாரம்பம்
17	29	சனி	ஸ்ரீ பெரும்பூதூர் உடையவர் உத்ஸவாரம்பம்
21	மே. 3	புத	திருக்கண்ணபுரம் ஸ்ரீஸௌரிராஜப் பெருமாள் விபீஷணாழ்வானுக்கு நடையழகு ஸேவை
24	6	சனி	ஸ்ரீப்ருகு மஹர்ஷி ஜயந்தி மற்றும் நம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹீந்த்ரமஹா தேஶிகர் திருநக்ஷத்ரம்.
26	8	திங்	உடையவர் சாற்றுமறை
27	9	செவ்	மேற்கு மாம்பலம் ஸ்ரீகோதண்டராமர் தவ்ஜாரோஹணம்
29	11	வியா	மேற்கு மாம்பலம் ஸ்ரீகோதண்டராமர் கருட ஸேவை திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாள் ப்ரஹ் மோத்ஸவாராம்பம்.
30-1	12-14	வெ-ஞா	திருமலை ஸ்ரீ பத்மாவதீ ஸ்ரீநிவாஸ பரிணயோத்ஸவம்
31	13	சனி	ஆழ்வார்திருநகரியில் நவதிருப்பதி பெருமாள் கருடஸேவைகள்

சென்ற மாசி 29 (12.3.00) முதல் பங்குனி 8 (21.3.00) வரை தஞ்சை Dt. திவ்ய தேசமான கண்டியூரில் பரம ஶிவனின் சாபம் தீர்த்தருளிய ஹரஶாப விமோசனப் பெருமாளுக்கு ப்ரஹ்மோத்ஸவம் சிறப்பாக நடைபெற்றது.

சென்ற பங்குனி 10 (23.3.00) முதல் பங்குனி 19(1.4.00) வரை திருநீர் மலை ஸ்ரீநீர்வண்ணப் பெருமாளுக்கும் சென்னை வண்ணாரப்பேட்டை ஸ்ரீ பக்த வத்ஸலப் பெருளுக்கும் ப்ரஹ்மோத்ஸவம் சிறப்பாக நடை பெற்றது.

சென்ற பங்குனி 13 (26-3-00) அன்று கருடசேவையும் பங்குனி 18 (31.3.00) அன்று திருத்தேர், தீர்த்தவாரி, ஶ்ரவண தீப உத்ஸவமும் ஒப்பிலியப்பன் கோவில் வெங்கடாசலபதிக்கு விஶேஷமாக நடை பெற்றது.

ஸ்ரீ புருஷ ஸூக்த வ்யாக்யானம்

N.S.பார்த்தஸாரதி பட்டாச்சாரியார், ஆசிரியர் ''ஸ்ரீவைகானஸம்''.

மந்த்ரம்-18

1. யஜ்ஞேந யஜ்ஞம்அய ஜந்த தே[3]வாஃ। 2. தாநி த[4]ர்மாணி ப்ரத[2]மாந்யாஸந்நு।

3. தேஹ நாகம் மஹிமிகமாநஸ் ஸசந்தே। 4. யத்ர பூர்வே ஸாத்[4]யாஸ்ஸந்தி தே[3]வாஃ॥

அர்த்தம்ஃ நித்ய ஸூரிகளான தேவர்கள் ப்ரஹ்மனை யஜ்ஞ புருஷனாகக் கொண்டு ஸ்ருஷ்டி ரூபமான யஜ்ஞத்தைச் செய்தனர். அந்த யஜ்ஞம் முதலான தர்மங்கள் முக்யங்களாக ஆயின. இவ்விஷயங்களை அறிபவர்கள் பெருமையுடையவர்களாய், பகவத்பக்தியையே ஸாதகம் செயதுகொண்டிருக்கும் ஸாத்யர்களான பழைமையோரான தேவர்கள் (அனந்த கருட விஷ்வக்ஸேநாதிகள்) வஸிக்கின்ற பரம பதத்தை அடைகின்றனர்.

வ்யாக்யாஃ புருஷஸூக்தத்தின் பூர்வானுவாகம் இம்மந்த்ரத்துடன் முடிவடைகிறது. இத்துடன் முடிகிற பூர்வானுவாகம் ''நாராயணம்'' என மஹர்ஷிகளால் அழைக்கப் படுகிறது. இம்மந்த்ரத்தில் முதலிரண்டு வாக்யங்களால், ஏற்கனவே அருளப்பட்ட ஸ்ருஷ்டி ப்ரகாரமும், இறுதியிரண்டு வாக்யங்களால், 'வேதாஹம்' எனும் மந்த்ரத்தால் சொல்லப்பட்ட பகவத் உபாஸநமும் அதன் பலனும் சொல்லப் படுகின்றன, என்று வித்யாரண்யர் வ்யாக்யாநம் செய்துள்ளார்.

யஜ்ஞத்திற்கு முக்ய ஸாதனம் யாகபஶு. யாகபஶுவே யஜ்ஞமாகும் முக்யத்வம் பெற்றுள்ளது. யஜ்ஞம் (யஜ்ஞபஶு) ஆகிற ப்ரஹ்மனைக் கொண்டு நித்ய ஸூரிகளான தேவர்கள் ப்ரஜாஸ்ருஷ்டியாகிற யஜ்ஞத்தை செய்தனர். அதுமுதற் கொண்டு யஜ்ஞம், தானம் என்பவை உலகில் முக்யமாக செய்யப்படவேண்டியவை ஆயின. ஸ்ரீபகவத் கீதையிலும், ''ஸஹ யஜ்ஞைஃ ப்ரஜாஸ்ஸ்ருஷ்ட்வா'' என்று, யஜ்ஞங்களுடன் கூட அனைத்து ஜீவராஶிகளையும் படைத்த பகவான் சொல்கிறார்- ''இந்த யஜ்ஞத்தைக் கொண்டு வ்ருத்தியை பெறுங்கள். இந்த யஜ்ஞம் நீங்கள் கோரியதையெல்லாம் கொடுக்கக் கடவது.''

இந்த ஸ்ருஷ்டி ரூபமான யாகத்தை (புருஷஸூக்தத்தை) அறிந்து அர்த்தத்துடன் சொல்லுபவர்கள்,மிகப் பழைமையானவர்களும் (பூர்வர்களும்) ஆனாலும் புதியவர்கள் போலே அழகிய தோற்றமுடையவர்களுமான நித்யஸூரிகள் வாழும் வைகுண்டத்தை மஹிமை பெற்றவர்களாய் அடைகிறார்கள், என இறுதி வாக்கியத்தில் காண்கிறோம்.

''நாகம்'' என்பது ஸ்ரீவைகுண்டத்தையே குறிக்கிறது. இவ்விடத்தில் நமது **ஸ்ரீவிகநஸ மஹர்ஷி** அருளிச் செய்த **அக்னிப்ரதிஷ்டையை** பெருமையுடன் எண்ணிப் பார்க்கிறோம். ப்ரஹ்மஸோம ஆராதனம் ஆனபிறகு ஹோமம் செய்யும் அத்வர்யு, ப்ரஹ்மனையும் ஸோமனையும் ப்ரஹ்மன் ப்ரோக்ஷி ஷ்யாமி ப்ரோக்ஷ யஜ்ஞம் எனத் தொடங்கி ப்ராத்திக்கிறார் ப்ரஹ்மனே! ப்ரோக்ஷிக்கப் போகிறேன்! நீர் யஜ்ஞத்தை ப்ரோக்ஷித்து தேவதைகளை வரச்செய்து அதனாலே இந்த யஜ்ஞம் பூர்த்தியாக வேணும். ஸப்தரிஷிகளெல்லாம் புண்யம் செய்து எந்த உலகத்தை அடைந்தனரோ, அந்த பரமபதத்தை, (ஸ்ரீவைகுண்டத்தை)

இந்த யஜ்ஞமும், யஜமானனும் அடைய வேண்டும். ''நாகஸ்ய ப்ருஷ்டே யஜமானோ அஸ்து'' என்று இவ்வாறே ஸோமனையும் ப்ரார்த்திக்கிறார். ''நாகம்'' என்பது ஸ்ரீவைகுண்டத்தை குறிப்பதாகும். மஹிமாநஃ - பரமாத்ம ஜ்ஞாநத்திலே ஐயம் இல்லாதவர்களாய் அன்ந்த கருட விஷ்வக்ஸேநாதிகள் இருக்கும் ஸ்ரீவைகுண்டத்தை அடைகின்றனர்.

ஸாத்யரான தேவர்கள் என்று நித்யஸூரிகளை பற்றியும் ஸாத்யர்-பகவத்கைங்கர்யபரர்அவர்தம் இருப்பிடம் வைகுந்தம் என்பது பற்றியும் இப் புருஷஸூக்தத்திலே பூர்வானுவாகத்திலே நிறைவாகக் காண்கிறோம்.

உத்தாரானுவாகம்

மந்த்ரம் - 1

1. அத்ப்யஃ ஸம்பூ⁴தஃ ப்ருதி²வ்யை ரஸாத் ச। 2. விஶ்வகர்மணஃ ஸமவர்த்தாதி⁴⁴ ।
3. தஸ்ய த்வஷ்டா வித³தா⁴த் ரூபம் ஏதி। 4. தத்புருஷஸ்ய விஶ்வம் ஆஜானம் அக்ரே ॥

அர்த்தம்: உலகம் ஜலத்தினின்று உண்டானது. பூமியிலுள்ள அன்னரஸத்தால் வளர்ச்சியுற்றது. பரமபுருஷனிடமிருந்தே உண்டாயிற்று. புருஷோத்தமன் இவ்வுலகை தரித்துக்கொண்டே வ்யாபிக்கிறான். ஆகவே, இவ்வுலகெல்லாம் அந்த மஹாபுருஷனுக்கே ஶேஷமாக (அங்கமாக) இருப்பதை முன்னமே அறிந்தேன்.

வ்யாக்யானம்: உலகம் நீரிலிருந்து உண்டாயிற்று. (அதற்குமுன் ஜலப்ரளயமாயிருந்தது). அப ஏவ ஸஸர்ஜாதௌ தாஸு வீர்ய முபாஸ்ருஜத் । ததண்டம் அபவத் ஹைமம் ஸஹஸ்ராம்ஶுஸமப்ரபம் ॥ என்று மனுஸ்ம்ருதியும் இந்த ஸ்ருஷ்டியைக் கொண்டாடுகிறது. நீரை முதலில் உண்டாக்கியே பெருமாள் ''தஸ்ய த்யாநாநந்தஸ்ய லலாடாத் லேவேதோ அபதத் । தா இமா ஆபஃ ... '' என்று மனத்தால் ஸங்கல்பம் செய்த மாத்ரத்திலே அவர்தம் நெற்றியிருந்து வியர்வை நீரில் விழுந்து பொன்மயமான அண்டமாக ஆனது, என்று மனுஸ்ம்ருதி கூறுகிறது. நம்மாழ்வார், இதையே, ''தானோர் பெருநீர் தன்னுள்ளே தோற்றி'' என்றருளிச் செய்தார்.

பூமியிலிருந்து உண்டான அன்ன ரஸங்களால் இவ்வுலகம் வ்ருத்தியடைந்தது.

விஶ்வகர்மா எனும் பெயர் மஹோபனிஷத், விஷ்ணு ஸஹஸ்ர நாமத்திலும் பெருமாளுடையதே எனத் தெளிகிறோம். ஸர்வஶக்தியும் படைத்த, உலகனைத்தையும் ஸ்ருஷ்டி செய்த பெருமாளிடமிருந்தே இந்த உலகமும், பூமியும், நீரும் உண்டாயின. ஜலத்தினின்றும், பூமியிலிருந்தும் உலகம் தானாகவே உண்டாகவில்லை. பெருமாளே ஆதி காரணன் என்று வேதம் மூலத்தைக் காட்டி அருள்கிறது.

தஸ்ய த்வஷ்டா... ஸர்வேஶ்வரன் இவ்வுலகை தரித்துக்கொண்டே வ்யாபிக்கிறான். தா⁴தா நாராயணஃ என்று ஸுபாலோபனிஷத்தில் பெருமாளே அனைத்தையும் தாங்குபவனாக புகழப்படுகிறான். நம் ஸ்ரீவைகாநஸத்துக்கே சொந்தமான **ஏகாக்ஷர ஸூக்தத்திலும்**, ''தா⁴தா விதா⁴தா பவனஸ்ஸுபர்ணோ விஷ்ணுர் வராஹோ ரஜனீ ரஹஶ்ச'' என்று எம்பெருமான் புகழப்படுகிறான்.

தத்புருஷஸ்யவிஶ்வம் - ஆகவே இவ்வுலகம் புருஷனுடையதே. ஆஜாநம் அக்ரே - (பகவானுக்கே உரியது இவ்வுலகம்) என்பதை நான் முன்னரே அறிந்தேன் என்று வேதபுருஷன் கூறுகிறார்.

(லக்ஷ்மீஸமேதனான) பகவானே உலகை ஸ்ருஷ்டித்து, தரித்து, வியாபித்தும் இருப்பதாக சொல்வதாலும் உலகை உடையவன் அவனே என்று சொல்வதாலும் நம் ஸ்ரீ வைகானஸர்களின் லக்ஷ்மீ விஶிஷ்டாத் வைத பாஷ்யத்தின் பொருளே வேதத்தின் உட்பொருளாய் அமைந் துள்ளது என்பதைத் தெளிந்து மகிழ்கிறோம்.

ஸர்வே ஜனாஸ்ஸுகிநோ பவந்து ॥ **(தொடரும்)**

மருத்துவக் கட்டுரை-4

எஸ். ஸ்ரீதரன், பரம்பரை சித்த மருத்துவர், சதுரங்கப்பட்டினம்.

கறிவேம்பு

ஸ்ரீனிவாஸ கல்யணத்தில் தனது குடும்பத்தினர் நடத்திய கல்யாண பெருமைகளை எல்லாம் சற்று கர்வத்தால் புகழ்ந்து கொண்டிருந்த பத்மாவதியை பார்த்து ஸ்ரீனுவாஸர், ஆமாம் உங்கப்பா என்ன அப்படி கல்யாணம் சிறப்பாக செய்துவிட்டார். சாப்பாட்டில், கறிவேப்பிலையே இல்லையே என ஸ்ரீனுவாஸர் நையாண்டி பண்ண பத்மாவதி கோபித்து கொண்டுபோனதாக புராணம் கூறும் சிறப்புமிக்க கறிவேம்புதான் கறிவேப்பிலை, கருவேப்பிலை, கருவேப்பிலை, கருகப்பிலை என்பர்.

புராணகாலம் தொட்டு இன்றைய காலம் வரை முக்கிய பொருளாக இது உலா வருகிறது. நமது பரதகண்டத்திலே ஒவ்வொருவர் வீட்டு சமையலும், மடப்பள்ளியிலும், இது பங்கு பெறாத இடம் இல்லை. இதற்கு என இயற்கையாகவே மனம், குணம் உள்ளதால் சமையலில் அதிக இடம் பிடித்துள்ளது. இன்னும்கூட கிராமங்களில் ஒரு குழந்தை இருந்தால் அக்குடும்பத்தினரைப் பார்த்து ஒரு குழந்தை பெற்றாலும் நல்ல கருவேப்பிலை கொத்தாகட்டும் பெற்று இருக்கிறாள் என்பார் அதற்கு அர்த்தம் என்ன ஒரு கொத்து கருவேப்பிலையை வைத்து அக்குடும்பத்திற்குத் தேவையான சுவையான சமையலை செய்து விடலாம். அதுபோல் அக்குழந்தையின் அறிவு மேன்மையால் சிறப்பித்து விளங்கும் தன்மைக்கு கறிவேம்பினை ஒப்பிட்டுக் கூறுவர்.

வைட்டமின் 'ஏ' உயிர்சத்து நிறைய இருக்கிறது. வைட்டமின் ஏ உயிர்சத்து நமது உடல் வளர்ச்சிக்கும், நமக்கு எந்தவிதமான வியாதியும் வராமல் தடுக்கவும் பயன்படக் கூடியதாக இருக்கிறது. இத்தகைய சிறப்புமிக்க கருவேம்பினை குழம்பு, ரசத்துடன் சேரும் பொழுது தூக்கி எரியாமல் அதனையும் சேர்த்து சாப்பிடலாம்.

1. கறிவேப்பிலையை நிழலில் உலர்த்தி மிளகு, உப்பு, சீரகம், சுக்கு முதலியன சேர்த்து பொடியாக்கி சாதத்துடன் கலந்து நெய் கூட்டி சாப்பிட வாய் அரோசிகம், மந்தம், மந்தத்தால் ஏற்படும் பேதி, மலக்கட்டு, உஷ்ணம் முதலியன குணமாகும்.
2. கறிவேப்பிலையை பச்சையாக புளி, உப்பு, மிளகாய் உடன் கொத்தமல்லி, இஞ்சி இவற்றையும் சேர்த்து அரைத்து துவையல்

செய்து சாதத்துடன் கலந்து சாப்பிட பிரதவாத்தி அஜீரணம், வயிற்றில் ஏற்படும் சத்தம் மற்றும் இதனை தொடர்ந்து சில நாட்கள் சாப்பிட கண்பார்வை தெளிவடையும். பல்லுக்கு உறுதி கொடுக்கும், நரம்புகளை முறுக்கேற்றி நல்ல பலசாலியாக இருக்கவும். புதிய இரத்தம் உற்பத்தியாகவும் காரணமாக அமையும். குறிப்பாக கர்ப்ப ஸ்திரீகள் சாப்பிட்டு வந்தால் வயிற்றில் உள்ள குழந்தை உடல் உறுதிபெறும். அறிவு, ஜீரணத்திற்கு மிக முக்கியமானதாகும். சொரி, சிரங்குவராது. அப்படி தோல் சம்பந்தமான நோவுக்கு தினசரி சமையலில் கறிவேப்பிலை துவையல் சாலச் சிறந்தது.

3. கறிவேப்பிலையை கைப்பிடி அளவு எடுத்து கசகசா, ஒரு டீஸ்பூன், கஸ்தூரி மஞ்சள்தூள் ½ டீஸ்பூன் அளவு எடுத்து மைபோல் அரைத்து முகத்தில் பூசி அரைமணி நேரம் கழித்து முகத்தை சீயக்காய்த்தூள் (அல்லது) ஸ்நான பவுடரால் தேய்த்து அலம்பினால் முகத்தில் ஏற்பட்ட அம்மை வடு மறையும். முக வசீகரத்திற்கும் நல்லது. ஆனால் தொடர்ந்து 1 மாத காலம் காலை வேளையில் செய்யவும்.

4. கறிவேப்பிலையை நன்கு அரைத்து கொட்டை பாக்கு அளவு எருமை தயிரில் கலந்து மூன்று நாட்கள் காலை வேளையில் சாப்பிட சீதபேதி குணமாகும். இந்த சமயம் அதிகாரம், புளிப்பு சேர்க்கக் கூடாது.

தொடரும்

கோ. ஸ்ரீநிவாஸராகவ பட்டாச்சார், திருவாயர்பாடி

கேள்வி: சராத்ததில் நிமந்த்ரித ப்ராம்மணர்களின் கட்டை விரலை தன் கட்டை விரலால் இணைத்துக் கொண்டு அன்னாதிகளை ஸ்பர்சிக்கச் சொல்வது ஏன்?

பதில்: அங்குஷ்டமாத்ர:புருஷோ அங்குஷ்டஞ்ச ஸமாஸ்ரிதः ஈஸः ஸாவஸ்ய ஜகதப்ரபுः ப்ரீணாதி விஸ்வபுக் என்பது ஸ்ருதி.

அங்குஷ்டமாத்ரோ பகவான் விஷ்ணு: பர்யடதேமஹீம்
ராக்ஷஸானாம் வதார்த்தாய கோபவான் ப்ரஹரிஷ்யதி
தஸ்மாத் ஸ்ராத்தேஷு ஸர்வேஷு அங்குஷ்டகரஹணம் ஸம்ருதம்
விஷ்ணோஹவ்யம்ச கவ்யம் ச ப்ரூயாத் ரக்ஷே திதிசக்ரமாத்

கட்டை விரலளவான வடிவத்துடன் கட்டை விரலில் விளங்கும் விஷ்ணு, ஸ்ராத்தத்தில் ஹவ்யம் கவ்யம் இரண்டையும் ரக்ஷிப்பதால் கட்டை விரலை இணைத்துக் கொண்டு போஜ்ய பாத்திரத்தைத் தொட்டு விஷ்ணுவே கவ்யத்தை, ஹவ்யத்தை ரக்ஷிக்க வேண்டும் என்று ப்ரார்த்திக்க வேண்டும். ஸ்ருதி ஸ்ம்ருதி இரண்டும் இதற்கு ஆதாரமாக இருக்கின்றன. எனவே ஸ்ராத்தத்தில் விஷ்ணுவை வரிக்க வேண்டியதும் அவசியமாகிறது.

விஷ்ணு வரணே ஸ்ராத்தம் ஸித்யதி
விஷ்ணுவரண அபாவே ஸ்ராத்தம் ந ஸித்யதி
யச்சார்த்தம் பார்வணம் ப்ரோக்தம் தச்சார்த்தம் வைஷ்ணவம் விநா
க்ருதம் தூஷ்யதி கௌந்தேய பதிதே நேக்ஷிதம்யதே
அப்தே மஹாலயே ஸ்ராத்தே ஸபிண்டீகரணேததா
வ்யர்த்தம் பவதி தத்ஸ்ராத்தம் வாஸுதேவம் விநாக்ருதா

என்பதாலும் ச்ராத்தத்தில் விஷ்ணுவை வரிக்காவிட்டால் அது வீணாகிறது. விஷ்ணோः ஹவ்யம்/கவ்யம் ரக்ஷஸ்வ என்ற வசனங்களும் பொருளற்ற தாகிறது. (ஆதாரம் பைத்ருமேதிகப்ரயோகம்) நல்லூர் வைகானஸ க்ரந்தமாலா வெளியீடு.

ஸ்ரீ. உ.வே. S. கோபாலகிருஷ்ண பட்டாச்சாரியார், பொன்னேரி

ஸ்ரீவைகானஸத்தில் அநபாயினன்

(புலவனூர் ஸ்ரீ. கஸ்தூரி ரங்கபட்டாச்சாரியார்)

ஸ்ரீவிஷ்ணும் மஹீயுக்தம் சாந்தம் சேஷம் ககாதிபம்।
ஸுதர்சனாத்யாயுதாநி ஸமஸ்தாநி நமாம்யஹம்॥

ஸர்வலோக ஶரண்யனாந பகவாந் துஷ்டநிக்ரம் சிஷ்டபரிபாலனம் என்னும் இரண்டு காரணங்களுக்காகவே பல ரூபங்களையும், ரூபங்களுக்கேற்ற ஆயுதங்களையும் தரிக்கிறார். அந்த ஆயுதங்களிலே சக்ரமே சிறந்து விளங்குகிறது. அச்சக்ரம் ஸுதர்சனமென்று வழங்கப் படுகிறது. ஸு என்றால் நல்லது என்று பொருள்படும், தர்ஶனஃ - என்றால் காண்பிப்பவன் என்று பொருள். நல்லதையே காட்டக்கூடியவன். கஷ்டங்களை போக்கி, சுகத்தை கொடுக்க அவனால் அனுப்பபட்டவன் என்று மஹான்கள் பேசுகிறார்கள் - (விஷ்ணுவால்)

அச்சுதர்சனன் ஆகமங்களில் விசேஷமாக பேசப்படுகிறான். நம் ஸ்ரீ வைகாநஸ பகவத் சாத்திரத்திலே நன்றாக சொல்லப்பட்டிருக்கிறான். மானுஷீகம், தெய்வீகம் என்று 2 பாகங்களிலும் முக்கியத்துவம். அளிக்கப்பட்டுள்ளது.

உதாஹரணமாக - நிஷேகாதி ஸம்ஸ்காரங்களிலே விஷ்ணு பலி என்னும் கர்மா பண்ணப் படுகிறது.கர்ப்பத்திலேயே ஸ்ரீவைஷ்ணத்துவ மானது ஸித்திக்க இது பண்ணப்படுகிறது. அதிலே, பாயஸத்தில், ''பாயஸ மேஷே சக்ரஶங்கௌ அங்கயித்வா லேகயித்வா, சேஷம் பத்நீம் ப்ராசயேது'' என்றுள்ளபடி சக்ரசங்கங்களை தர்ப்பத்தால் பாயஸத்தில் எழுதித் பத்நியிடம் கொடுக்கச் சொல்லியிருக்கிறது. இதுவே பூர்வப்ர யோகத்தில் "கர்ப ை ஷ்ணவ ஸித்யர்த்தம்'' என்று சங்கல்ப்பித்து பண்ணச் சொல்லி இருக்கிறது.

பின்னர் ஆராதனக்ரமத்தில் ப்ரம்மாந்யாஸத்தில் தினமும் அர்ச்சகன். ''ஸுதர்சன மபிக்ருஹ்ணாமி'' என்ற மந்த்ரத்தால் புஜங்களில் தரித்துகொள்ளச் சொல்லுகிறது. பீடார்ச்சனத்தில் சக்ரநாமாவளியும், த்வஜஸ்தம்பத்தில் ஒரு பக்கத்தில் தேவதையாகவும், த்வஜாரோஹண கத்யமொன்றிலும், பலிவிதாந தேவதையாகவும் சுதர்சனன் விளங்கு கிறான். ம்ருத்ஸங்க்ரஹணத்திலும், அங்குரார்பணத்திலும் சுதர்சன ரிக்குகளும், ஆவாஹனங்களும் சொல்லப்படுகின்றன. ப்ரத்யேகமாக ஸுதர்சனாவாஹனம் பகவான் மரீசியால் 'விமாநார்ச்சநாகல்பத்தில்'' ஸுதர்சனம் சக்ரம் ஸஹஸ்ரவிகசம் அநபாயிநமிதி'' என்று சொல்லப் பட்டுள்ளது. மஹாசாந்திக்கு முக்யமானதான ஸர்வதைவத்யத்திலும், சுதர்சன மந்த்ரங்கள் காணப்படுகின்றன.

பவித்ரோத்ஸவத்திலும் கும்ப ஆவாஹனத்திற்கு பிறகு ''ஸர்வர க்ஷார்த்தம் சக்ரம் ஸம்பூஜ்ய'' என்று காரிகை சொல்லி, தனியாக சுதர்சனத்தை ஆவாஹித்து பூஜிக்கச்சொல்லுகிறார்கள். இப்படி யெல்லாம் பேசப்படுகிற, சுதர்சனர் புகழ் பேசினால் இவ்வுலகமே க்ஷேமப்படுமென்பதில் ஐயமில்லை -

ஸர்வேஜநாஸ்ஸுகிநோபவந்து.

மணமாலை

மணமகன் தேவை

F74: காஸ்யபம், மூலம், 6.5.77, 22 வயது, +2 typing, computer knowledge,. 5'6''. தேவைப்படும் வரன் பணியில் உள்ளவர். முகவரி: ஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்தி பட்டாச்சார், கோவில் அர்ச்சகர், கீழ் வீராணம், பாணாவரம் (Via) அரக்கோணம்-632505.

F75: ஆத்ரேயம், அனுஷம், 18.7.75, 24 வயது, B.Sc., P.G.D.C.A. I.C.S.S. Doing DSAT with C.M.C. 5'2''. தேவைப்படும் வரன் பணியில் உள்ள பட்டதாரி, (any professional degree) முகவரி. Sri. A. Rangacharyulu, A-2, Deevee Apartments, Navodaya Colony, 1st Parrelal Lane to Bank Colony II Road, Vijayawada-520008. Ph.(0866-484876, 435393. (ஆங்கிலத்தில் கடிதம்எழுதி தொடர்பு கொள்ளவும்).

F76: கௌதமம், பூரம். 6.1.72, 27 வயது. S.S.L.C. தையல். தேவைப்படும் வரன். பணியில் உள்ளவர். முகவரி: ஸ்ரீ P.R. லக்ஷ்மீநாராயண பட்டாச்சார், 1/82, அக்ரஹாரம், வாளாடி, திருச்சி Dt. 621218.

F.77: காஸ்யபம், அஸ்தம், 21.11.73, 27 வயது (செவ்வாய் தோஷம்) B.Com., DCCP, Shorthand Eng. 5' 4" தேவைப்படும் வரன் பணியில் உள்ளவர்/ அர்ச்சகர், முகவரி.ஸ்ரீ. A.V. ஸ்ரீனிவாஸாச்சார்யுலு, No.12, R.N.மாட வீதி, திருப்பதி- A.P. 517507 Ph.No. (08574) 28814

F.78: ஆத்ரேயம், திருவோணம், 30.10.76, 23 வயது. +2, 150cm, தனியார் துறை (ஒசூர்) சம்பளம் ரூ.10,000/- தேவைப்படும் வரன் பணியில் உள்ளவர் முகவரி:- ஸ்ரீ V.ரமாமணி பட்டாச்சார் அருவாப்பாடி (P.O) நீடூர்(Via) மையிலாடுதுறை, நாகை DT. 609 203 Ph.No. (04364) - 27528

F.79: காஸ்யபம், பூரம் - 1-4-77, 22 வயது, B.Sc, 5'3" தேவைப்படும் வரன் பணியில் உள்ளவர் முகவரி. ஸ்ரீ.T. ஸ்ரீனிவாச பட்டாச்சார், 2184, V.P. கோவில் தெரு, நாலு கால் மண்டபம், தஞ்சாவூர் Dt. 613 009.

F-80: கௌதமம், உத்திராடம், 9.7.71, 28 வயது, B.Com, 5 அடி தனியார் துறை சம்பளம் ரூ. 1,000/- தேவைப்படும் வரன் பணியில் உள்ளவர் முகவரி: ஸ்ரீ R. வெங்கட்ராம பட்டாச்சார், பெருமாள் சன்னிதி அர்ச்சகர், பாண்ட மங்கலம், நாமக்கல் Dt. 637208 P. (04268) 23797

F-81: பார்கவம், ஹஸ்தம், 1.11.64 35 வயது, S.S.L.C. 5 அடி தேவைப்படும் வரன். அர்ச்சகர்: - முகவரி: ஸ்ரீ. ப்ரசன்ன வெங்கட்ராம பட்டாச்சார், பெருமாள் சன்னிதி அர்ச்சகர், ஆத்தூர் கோட்டை, P.O. சேலம்

F-82: காஸ்யபம், ரேவதி, 16.7.70, 29 வயது, B.A. Typewriting, 5 அடி தேவைப்படும் வரன், பணியில் உள்ளவர், முகவரி: ஸ்ரீ சம்பத் பட்டாச்சார், C/o. C. கண்ணன் (C.W.C) அக்ரஹாரம், கல்யாணபுரம் P.O. தஞ்சாவூர் Dt. Ph. 043621 61852.

F-83. காஸ்யபம், ரோஹிணி, 12-10-76, 24 வயது 5 அடி 8 வது தேவைப்படும் வரன் அர்ச்சகர், முகவரி, ஸ்ரீ S. அனந்தபட்டாச்சார், C/o K. ஸ்ரீநிவாசபட்டாச்சார், சின்னவரிக்கம் P.O. துத்திப்பட்டு (Via) ஆம்பூர் - 635811

*F3: காஸ்யபம் அவிட்டம் 30 வயது, ஐந்தாம் வகுப்பு 5'2'' தேவைப்படும் வரன் அர்ச்சகர்/பணியிலிருப்பவர். முகவரி: ஸ்ரீ K.A. துரை பட்டாச்சார், 24, எல்லையம்மன் கோவில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-600 033. Ph. 044-4710036

*F4: காஸ்யபம், மிருகசீர்ஷம் 13.3.73, 27 வயது M.A., (B.Ed.,) 5'3'' தேவைப்படும் வரன், பணியில் உள்ள பட்டதாரி. முகவரி: ஸ்ரீ K.A. துரை பட்டாச்சார், 24, எல்லையம்மன் கோவில் தெரு, மேற்கு மாம்பலம்,சென்னை-33. Ph. 044-4710036

*F.16: பாரத்வாஜம், சதயம், 13.01.98, 22 வயது 10 வவது, 5 அடி, தேவைப்படும் வரன் அர்ச்சகர்/பணியில் இருப்பவர் முகவரி. ஸ்ரீ.P.T.ராமதுரை பட்டாச்சார், பன்பாக்கம் கிராமம், கவரைப்பேட்டை P.O. கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் Dt.601 206

*F-11: கௌதமம், ரேவதி, 27 வயது, 8 வது, 5 அடி, தேவைப்படும் வரன் அர்ச்சகர் முகவரி: ஸ்ரீ G. நரசிம்மபட்டாச்சார், பெருநகர் Village P.O. (Via) உத்திரமேரூர் - 603404

*F-59. காஸ்யபம், பூராடம், 19-10-77, 22 வயது, 5'2' B.Com, D.C.A. தேவைப்படும்வரன் பணியில் உள்ளவர் முகவரி, ஸ்ரீ S. சந்தானம், No. 88, அக்ரஹாரம் தெரு, விட்டலூர், திருநீலக்குடி P.Ol. கும்பகோணம் TLK, தஞ்சாவூர். Dt. - 612108

மணமகள் தேவை

M-54: காஸ்யபம், கிருத்திகை, 27.6.73. 26 வயது. 10 வது, 5'6'' தனியார் துறை சம்பளம் ரூ.2000/- தேவைப்படும் வதூ குடும்பத்திற்கு ஏற்ற பெண். முகவரி: ஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்தி பட்டாச்சார், கோவில் அர்ச்சகர், கீழ் வீராணம், பாணாவரம் (Via) அரக்கோணம்-632505.

M.55: ஆத்ரேயம், பூரட்டாதி, 5.3.73, 26 வயது, B.Tech. Computer Dip. 1996 வருடம் முதல் அமெரிக்காவில் பணிசெய்கிறார். 5'5''. தேவைப்படும் வதூ. படித்த, அழகிய, குடும்பப்பாங்கான பெண். (வெளிநாட்டிற்குச் செல்ல விருப்பப்படுகிறவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். மேலும் ஆங்கிலத்தில் கடிதம் எழுதி தொடர்பு கொள்ளவும்) முகவரி. Sri. A. Rangacharyulu, A-2, Dee-vee Apartments, Navodaya Colony, 1st Parrelal Lane to Bank Colony II Road, Vijayawada-520008. Ph.(0866-484876, 435393.

M.56: ஆகஸ்த்யம், கேட்டை 11.9.67, 32 வயது, 10வது, Tv.Mechanism & Type Eng. 6 அடி, தனியார் துறை. சம்பளம் ரூ.2000/- தேவைப்படும் வதூ. குடும்பத்திற்கேற்ற பெண். முகவரி. ஸ்ரீ. C.K. ஸ்ரீனிவாச பட்டாச்சார், 26, அக்ரஹாரம் தெரு, சிந்தாதரிப்பேட்டை, சென்னை - 600 002. Ph: (044) 8416257

M-57 காஸ்யபம், ஹஸ்தம், 8.12.74., 25 வயது, B.Com, 5'10'' தனியார் துறை. சம்பளம் ரூ. 2900/- தேவைப்படும் வதூ. படித்த குடும்ப பாங்கான பெண். முகவரி: ஸ்ரீ A. சுந்தர பட்டாச்சார், 8-71 A, மேலபெருமாள் கோவில், புதுவயல் (P.O.) சிவகங்கை Dt.

M-58, காஸ்யபம், சதயம், 22-2-74, 26 வயது, 5' 5'' B.Com, Type Both./ தனியார்துறை, சம்பளம் ரூ. 5000 தேவைப்படும் வதூ - படித்தபணிக்கு செல்ல தகுதியான பெண், முகவரி, ஸ்ரீ P.S. சக்ரவர்த்திப்பட்டாச்சார், 3/A, வடக்குத்தெரு, ஒப்பிலியப்பன் கோவில், திருநாகேஸ்வரம், 612204

M-59. கௌதமம், அவிட்டம், 17-7-73, 27 வயது, +2, அர்ச்சகர் சம்பளம் ரூ. 1000/- தேவைப்படும் வதூ குடும்பத்திற்கேற்ற பெண் முகவரி. S. ராமமூர்த்திபட்டாச்சார், 1/16, அக்ரஹாரம், வரகூர். P.O. நடுக்காவேரி Via தஞ்சாவூர்.

*M1: காஸ்யபம், மிருகசீர்ஷம், 40 வயது, 8 வது 5'3'' அர்சகர் மற்றும் சைக்கிள் கடை உரிமையாளர். மாதவருமானம் ரூ.2000/- தேவைப்படும் வதூ, குடும்பத்திற்கேற்ற பெண். முகவரி: ஸ்ரீ K.A. துரை பட்டாச்சார், 24, எல்லையம்மன் கோவில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-33.

*M.10: பாரத்வாஜம், அவிட்டம், 11.10.70, 30 வயது. 10 வது 5'5'' உயரம் அர்ச்சகர் சம்பளம் ரூ.3000/- தேவைப்படும் வதூ குடும்பத்திற்கேற்ற பெண் - முகவரி.ஸ்ரீ P.T.ராமதுரை பட்டாச்சார், பண்பாக்கம் கிராமம், கவரைப்பேட்டை P.O. கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் Dt 601 206.

*M28: காஸ்யபம், சித்திரை, 12.9.72, 27 வயது, 10 வது 5'6'' அர்ச்சகர், சம்பளம் ரூ.3000/- தேவைப்படும் வதூ. குடும்பத்திற்கேற்ற பெண். முகவரி: ஸ்ரீ S. நாராயண பட்டாச்சார், 22, கூடல் அழகப் பெருமாள் கோவில் தெரு, மதுரை-625 001. Ph.(0425)-735601

*M-6 காஸ்யபம், ரோஹிணி, 17.5.69, 30 வயது, B.Com. A.I.C.A. 5'5" தனியார்துறை சம்பளம் ரூ. 2,200/- தேவைப்படும் வது. பணியிலுள்ள படித்த அழகிய குடும்பபாங்கான பெண். முகவரி: ஸ்ரீ N.S. ரவிபட்டாச்சார், அர்ச்சகர், 4/17, வடக்குமாட வீளாகம், சிக்கல் - 611108

குறிப்பு: இந்த பகுதியில் ஏற்கனவே வெளியிடப்பட்ட விளம்ப்ரங்கள் குலஸ்வாமிகளின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் மூன்று மாதத்திற்கு வெளியிட உத்தேசித்துள்ளோம் தேவைப்படுவோர் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து அதில் பழைய Sl.No. குறிப்பிட்டு அனுப்பவும்.

★ இக் குறியீடு செய்யப்பட்ட விளம்பரம் ஏற்கனவே வெளியானவை.

மணமாலை பகுதியில் பிரசுரமான எனது குமாரனின் விளம்பரத்தின் பயனாக (M-22) எனது குமாரனுக்கு திருமணம் நிச்சியமாகி உள்ளது ஆசிரியர்குழுவிற்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

ஸ்ரீ R. கேசவபட்டர் (தினமணி) மதுரை - 20

ஷஷ்ட்யப்த பூர்த்தி

பழமார்நேரி ஸ்ரீ உ.வே. R. வெங்கட்ராம பட்டாச்சாரியருக்கும் ஸ்ரீமதி பத்மாவதி அம்மங்காருக்கும் 8.3.2000 அன்று ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவம் சிறப்பாக நடைபெற்றது.

ஆயுஷ்ய ஹோமம்

ஆரணி ஸ்ரீ R. வெங்கடகிருஷ்ணபட்டாச்சாரியர் குமாரன் சிர.பவித்ரனுக்கு 27.3.2000 அன்று ஆரணியில் வர்ஷவர்தன ஆயுஷ்ஹோமம் வெகு சிறப்பாக நடைபெற்றது. மேற்கண்ட குழந்தைக்கு எங்களின் மனமார்ந்த ஆசிகள்.

ஸ்ரீவைகானஸம், AKS Trust

உபநயனம்

வாணியம்பாடி, ஸ்ரீ A. ஸுந்தர ராஜபட்டாச்சார் குமாரன் சிர. S. வேங்கட கிருஷ்ணனுக்கும் ஸ்ரீ A. சம்பத்குமாரபட்டாச்சார் குமாரன் சிர. S. வேங்கட ரமணனுக்கும் வாணியம்பாடியில் 8-3-2000 அன்று உபநயனம் சிறப்பாக நடை பெற்றது.

கடுக்கலூர் ஸ்ரீ. வெங்கட்ரமண பட்டாச்சார் குமாரன் சிர. V. பார்த்தசாரதிக்கும் ஸ்ரீ. வாஸுதேவ பட்டாச்சார் குமாரன் சிர. V. ஸ்ரீநிவாசராகவனுக்கும் கடுக்கலூரில் 9-3-2000 அன்று உபநயனம் சிறப்பாக நடைபெற்றது.

கீழ்வேளூர் ஸ்ரீ K. சௌரி ராஜ பட்டாச்சார் குமாரர்கள் சிர. சுந்தரராஜன் மற்றும் சிர.பிரஸன்ன வெங்கடேசனுக்கும் சென்னை, சாலிக்கிராமத்தில் 9-3-2000 அன்று உபநயனம் சிறப்பாக நடைபெற்றது.

சென்னை அயன்புரம், ஸ்ரீ S. பாபு பட்டாச்சார் குமாரன் சிர. நிர்மல் குமாருக்கு அயன்புரத்தில் 12-3-2000 அன்று உபநயம் சிறப்பாக நடைபெற்றது.

திருச்சி திருமங்கலம் ஸ்ரீ P.R. மாதவபட்டாச்சார் குமாரன் சிர - சுதர்சனனுக்கு திருமங்கலத்தில் 12-3-2000 அன்று உபநயனம் சிறப்பாக நடைபெற்றது.

மேற்கண்ட வடுக்களுக்கு எங்களின் மனமார்ந்த ஆசீர்வாதங்கள்.

ஸ்ரீ வைகானஸம் AKS Trust.

திருத்தம்

சென்ற இதழில் வெளியான உபநயனப் பகுதியில் திருச்சி Dt. குழுமணி ஸ்ரீ B.S. முத்துக்ருஷ்ண பட்டாச்சார் குமாரன் என்பதற்குப் பதிலாக ஸ்ரீ B S. முத்துக்ருஷ்ண பட்டாச்சார் பௌத்ரனும் ஸ்ரீ B.M. கோவிந்தராஜ பட்டாச்சார் குமாரனுமான சிர. G. ரகுராமனுக்கு என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

மணிஓசை - 4



இங்குண்டு அங்கில்லை அங்குண்டு இங்கில்லை
இங்கேயும் உண்டு அங்கேயும் உண்டு
இங்கேயும் இல்லை! அங்கேயும் இல்லை!

இது என்ன புதிர்? இது புதிரல்ல; பொன்மொழி!

மனம், மொழி, மெய்யை அடக்கிய தவசிகட்கு இவ்வுலகில் இன்பமில்லை; ஆனால் அவ்வுலகில் பேரின்பம் உண்டு; இங்கு இஷ்டப்படி திரிபவர் கட்கு அங்கு துன்பமே காத்திருக்கும். முற்பிறவி யின் வினைப்பயன் காரணமாக இழிந்த புழு, பூச்சிகளாகப் பிறப்படைந்தவர்க்கு இரு உலகிலும் துன்பந்தான்! ஆனால் எம்பெருமான் கைங்கர்யச் செல்வத்தைப் பெற்ற ஸ்ரீவைகானஸர்கட்கு என்றுமே ஆனந்தம் உண்டு! அத்தகைய குலத்தில் தோன்றிய ஒரு மஹான்தான் சிங்கப்பெருமாள் கோயில் ''பட்டா மாமா'' என அழைக்கப்பட்ட ஸ்ரீஉவே வெங்கட நரஸிம்ம பட்டாச்சாரியர். கர்ஷனாதி பிரதிஷ்டாந்தம் தோந்த இந்தஸ்வாமியின் திருக்குமாரர்கள் அனைவரும் அர்ச்சகர்களாகும் பாக்யம் பெற்றவர்களே; அந்தேவாஸிகளான ஸ்ரீஉவே ரங்கஸாமி பட்டாச்சார் ஸ்ரீஉவே ராமஸ்வாமி பட்டாச்சார் இருவருமே சிறந்த கைங்கர்யபரர்கள். தற்போது உள்ள ஸ்ரீமான்கள் S.V. பார்த்தசாரதி பட்டாச்சார், ஸ்ரீனிவாஸ பட்டாச்சார், கோபால கிருஷ்ண பட்டாச்சார் ஆகியோரும் நமது குலத்துக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஸ்ரீஉவே S.V. கோபாலகிருஷ்ண பட்டாச்சாரியர் ஸ்வாமி பாரி கம்பெனியில் 36 ஆண்டுகள் சுருக்கெழுத்தாளராகப் பணிபுரிந்தபின் தற்போது பாடலாத்ரி நரசிம்மஸ்வாமி ஸந்நிதியின் அர்ச்சகர்களில் ஒருவராகக் கைங்கர்யம் செய்து வருகிறார். பாடலாத்ரி (செங்குன்றம்) என்பது சிங்கப்பெருமாள் கோயிலின் மறுபெயர் செட்டி புண்யம் ஸ்ரீஉவே நரஸிம்மபட்டாச்சார் ஸ்வாமி இவருக்கு ஆசார்யன் என்பதை நன்றியுடன் நினைவு கூர்கிறார்.

செங்கை நகருக்கு அருகில் உள்ள ஆப்பூர் மலைமேல் எழுந்தருளியுள்ள ஸ்ரீனிவாஸப் பெருமாளுக்கு நித்யதிருவாராதனம் நடப்பதற்காக பெருமுயற்சி செய்து ஸம்ப்ரோக்ஷணம் முடித்து 300 படிகள் தினமும் கடந்து தமது திருக்குமாரர் சிர. பாஸ்கர பட்டாச்சார் மூலம் கைங்கர்யத்தை நடத்தி வருவது இவரது ஆஸ்திக்யத்தை வெளிப்படுத்துகிறது.

திருப்பதி, ஸ்ரீவில்லிபுத்தூர் முதலிய இடங்களில் நடந்த ஸம்புரோக்ஷணங் களில் அன்வயித்துள்ள இந்த ஸ்வாமி பரமஸாத்விகர் - சமூக உணர்வும் கொண்டவர்.

ஸ்ரீவைகானஸ பெனிபிட் சொஸைடியின் நாற்பத்து நான்காண்டு சரித் திரத்தில் பதினைந்து ஆண்டுகள் மேற்பார்வை இயக்குநராக இருந்து வீடுவீடாகச் சென்று சந்தா வசூலித்தும், ஆலோசனைகள் கூறியும் பல மலர்கள் வெளியிட்டும் சேவை செய்துள்ள இவர் தொடர்ந்து இச்சொஸைடிக்கு உதவி வருகிறார். மேலும் ஸ்ரீ வைகானஸ இளைஞர் நற்பணி சங்கத்திற்கு ஆலோசக ராகவும், அர்ச்சக சங்கத்தில் முக்கிய பொறுப்பாளராகவும் இருந்து தொண்டாற்றி வருகிறார். வைகானஸ தென்மாநில மாநாட்டின் வெற்றிக்கும் இவரது சேவை உதவியுள்ளது.

ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யும் இந்தஸ்வாமியின் சேவைக்குப் பல்லாண்டு பாடி மகிழ்வோமாக!

''விகனஸப்ரியன்'' (தொடரும்)

ஸ்ரீவைகாநஸ பகவத் ஶாஸ்த்ர முத்துக்கள்

தொகுத்தளித்தவர்.A.T.திருவேங்கட பட்டாச்சாரியார். அரக்கோணம்

1. வைகாநஸ ஶாஸ்த்ர லக்ஷணம்:-

வைகாநஸம் மஹாசாஸ்த்ரம் ஸர்வ வேதேஷூத்ஶருதம்
ஸர்வ வேதாந்த ஸாரபூதம் அபதர்க்யம் அநிந்திதம்,
வைதீக ரூப ஸேவிதம் விஷ்ணுராராதனாய ஶாப்த
ப்ரமாண மவலம்ப்யம் விஷ்ணுநா விகநஸப்ரோக்தம்॥

வைகானஸம் என்பது பரந்த சமயச் சட்டமாகும். எல்லா வேதங்களிலும் எடுத்துக் கொள்ளப்படுவதும் எல்லா வேதங்களையும் எடுத்தாள்வதுமாகும். எல்லா வேதங்களின் ஸாரம் அடங்கியுள்ளதாகும். தர்கா விதர்கங்களுக்கும் நிந்தனைகளுக்கும் அப்பாற்பட்டதாகும். வேத உருவில் பயன்படுவதாகும். விஷ்ணு ஆராதனைக்காக வேதச் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டதாகும்.

பரம்பொருளான விஷ்ணுவால் மஹரிஷி விகநஸருக்கு இந்த ஶாஸ்த்ரம் போதிக்கப்பட்டதாகும். இத்தகைய சிறப்புகளைக் கொண்டது. ஸ்ரீவைகானஸ பகவத் ஶாஸ்திரம்.

2. விகநஸாக்ஷர லக்ஷணம்:

'அ' காரோ அக்ஷராப்யாஸி
'ச' காரோ மந்த்ர ஶக்திமான்
'க' காரோ கர்ம நிபுண:

3. அர்சகாக்ஷர லக்ஷணம்

'அ' என்பதற்கு எழுத்தறிவுள்ளவன் என்றும்
'ச' என்பதற்கு மந்த்ர ஆற்றல் படைத்தவன் என்றும்
'க' என்பதற்கு செயல் திறனுடையவன் என்றும் பொருளாகும்.

4. அர்சக லக்ஷணம்:-

ஆத்யாத்ம குணஸம்யுக்தோ விப்ரஸ் ஸ்வாத்யாய தத்பர:।
வ்ருத்தவான் ஸத்யவாதீச க்ஞான ஶீலஶ் சயோகவித்॥
க்ருஹஸ்தோ ப்ரஹ்ம சாரீவா பக்த்யா வார்சன மாரபேத் ॥

ஆன்மீக (பரமாத்மா தொடர்புடைய சிந்தனை) குணமுள்ளவன், அறவோன், வேதமோதுவதில் ஈடுபாடு உள்ளவன், நன்னடத்தையுள்ளவன், உண்மை பேசுபவன், அறிவாளி, ஒழுக்கமுடையவன், யோகமறிந்தவன். இத்தகைய குணங்களுடைய க்ருஹஸ்தனோ ப்ரஹ்மசாரியோ பகவானை அர்ச்சிக்கத் தக்கவனாவான்.

அறிவிப்பு

நமது குல ஸ்வாமிகள் பங்கு கொள்ளும் பேட்மிண்டன் போட்டி வருகிற ஏப்ரல் 30 மற்றும் மே 1ந் தேதி சென்னை நந்தம்பாக்கத்தில் நடைபெற உள்ளது. இரட்டையர் போட்டி மட்டுமே நடைபெறும். ஆர்வமுள்ளவர்கள் ஏப்ரல் 25ந் தேதிக்குள் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ஸ்ரீ G. பார்த்தசாரதி பட்டாச்சார், 7, மேற்கு குளக்கரை தெரு, நந்தம்பாக்கம், சென்னை - 600 089. Ph.(R) 2329176, (O) 4825719

அம்மாமிக்கு அன்புடன் - 1

ஸ்ரீ.கோ. ஸ்வர்ணஸரோவர்

நமதுவைகாநஸ சமுதாயத்தில் ஆண்மக்களை மாமா என்றும், அவர்களின் பத்னிமார்களை மாமி அல்லது அம்மாமி என்றும் கௌரவத்துடனும் அன்புடனும் அழைப்பது சம்பிரதாயம்.

அதன் வழியே நம் சமுதாயத்திலுள்ள அம்மாமிகளுக்கு வைகானஸ தர்மம் குறித்தும், பெண்களின் தர்மம் குறித்தும் சிலவிஷயங்களை அன்புடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை என்ற பழமொழி ஒரு இல்லத்தில் பெண்ணுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. பெண்கள் எங்கு சந்தோஷமாகவும் கவுரவமாகவும் நடத்தப் படுகிறார்களோ அங்குதேவர்கள் மகிழ்கிறார்கள் என்று தர்மசாஸ்திரம் கூறுகிறது.

மனைவியை ஸஹதர்மசாரிணீ என்று சாஸ்திரம் குறிப்பிடுகிறது. புருஷர்கள் செய்யும் எல்லா தர்ம கார்யங்களிலும் மனைவியும் உடன் இருந்து ஈடுபட வேண்டும் என்பதாலேயே சாஸ்திரம் இவ்வாறு கூறுகிறது.

ஸீதா கல்யாண ஸமயத்தில், ஜனகமஹாராஜன்

''இயம் ஸீதா மம ஸுதா ஸஹ தர்மசரீதவ''

ப்ரதீச்ச சைனாம் பத்ரம்தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணினா''

என்று சொல்லி கன்யாதானம் செய்தார். உன்னுடன் தர்மங்களை உடன் இருந்து செய்வதற்காக எனது மகளாகிய ஸீதையை உன்கையில் ஒப்படைக்கிறேன். நீ அவள் கரம்பற்றி உனது ஸஹதர்ம சாரிணியாக பெற்றுக்கொள். உனக்கு மங்களம் உண்டாகட்டும் என்று சொல்லி கன்யா தானம் செய்துள்ளார். கல்யாணம் எதற்காகச் செய்து கொள்ள வேண்டும் என்றால் தர்மப்ரஜா வ்ருத்யர்த்தம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

திருமணம் செய்து கொள்ளாமலேயே ஆணும் பெண்ணும் கலந்து குழந்தைகளை பெற்றுக்கொள்ளலாம். ஆனால் அவர்கள் தர்மபிரஜை களைகளாக உலகம் ஏற்க முடியாது. பதினெட்டு சரீர ஸம்ஸ்காரங்களை அடைந்த ஒரு வைகானஸ ஆணுக்கும் வைகானஸ பெண்ணுக்கும் முறையாகத் திருமணம் நிஷேகம் ருதுஸங்கமனம் கர்ப்பாதானம், பும்ஸவனம், சீமந்தம் இவைகளை நடத்திப் பெறும் ஆண்மகனே மற்ற ஸம்ஸ்காரங்களைப் பெற்ற பின் பெருமாள் திருவாராதனத்துக்குத் தகுதிஉடைய வனாகிறான் என்று வைகானஸ சாஸ்திரம் சொல்கிறது. ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது.

வைகானஸர் அல்லாத இதர ஸூத்ரக்காரர்களையும் திருமணம் செய்து கொள்வது வைகானஸ தர்மமாகாது.

''அஷ்டவர்ஷாபவேத்கன்யா''

எட்டு வயதுக் குட்பட்டவளையே கன்யை என்று சாஸ்திரம் கூறுகிறது.

கல்யாணம் ஆகாத பெண்தான் கன்யை என்று நாம் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறோம். பெண் தூரமான பிறகு கல்யாணம் செய்வதை சாஸ்திரம் நிந்திக்கிறது.

ஆனால் 18 வயதுக்குள் திருமணம் செய்வதை சட்டம் தடுக்கிறது. தர்மசாஸ்திரத்திற்கு விரோதமாக சட்டம் ஏற்பட்டிருக்கிறது. சட்டத்தைப் பின்பற்றுவதா சாஸ்திரத்தைப் பின்பற்றுவதா என்கிற சங்கடம் ஏற்படுகிறது. இதைத்தான் தர்மசங்கடம் என்று சொல்கிறோம்.

சட்டத்தைப் பின்பற்றினால் தர்ம சாஸ்திரவிரோதமாகிறது. பாபம் ஸம்பவிக்கிறது. தர்மத்தைப் பின்பற்றினால் சட்டத்தை மீறியதற்காக அரசு தண்டிக்கும்.

இந்த மாதிரி ஸந்தர்பத்தில் தர்மத்தை மீறி சட்டத்தின்படி நடந்து கொண்டால் சாஸ்திர தர்மத்தை மீறியதற்கான பாபம் நம்மீது ஒட்டாது. பாபம் நிச்சயமாக ஏற்படுகிறது ஆனால் அது நம்மீது ஒட்டாது. அந்த பாபம் தர்மத்துக்கு விரோதமாக சட்டம் இயற்றிய அரசினையே சேரும். இவ்வாறு அரசினைச் சேரும் பாபங்கள் எவ்வாறு பலன் கொடுக்கிறது என்பதைத் தனியாக எழுதுகிறேன்.

பெண்ணுக்கு 18 வயதும் ஆணிற்கு 21 வயதும் நிரம்பியபிறகே திருமணம் செய்ய வேண்டும் என்ற சட்டத்தின்படியே 18 வயது பூர்த்தி, ஆனவுடன் திருமணம் செய்துவிட்டால் தர்மத்தை மீறியதற்கான பாபம் பெண்ணைப் பெற்றவர்களைச் சாராது. ஏன் என்றால் அவர்கள் புத்தி பூர்வமாக தர்மத்தை மீறவில்லை. மாறாக ஒரு பிரஜை அரசின் சட்டத்தை மதித்து நடக்கவேண்டும் என்றகிற பிரஜாதர்மத்தை அனுஷ்டித்ததாகவே ஆகும்.

பெண்ணைக் கன்னிகாதானம் செய்து கொடுக்கும்போது காது மூக்கு கை கால் கழுத்து இந்த பஞ்ச அங்கங்களிலும் பூஷணம் நகைகள் அணிவித்து கன்யாதானம் செய்யவேண்டும். இதுதான் ஸாலங்க்ருத கன்னிகாதானம் எனப்படுகிறது. ஸுமங்கலியான பெண் இந்த ஐந்து அங்கங்களிலும் ஆபரணங்களை எப்போதும் அணியவேண்டும். நெற்றியில் குங்குமம், அணியவேண்டும், தலைமயிரை முடிந்து கொண்டிருக்கவேண்டும். கேசங்களை விரித்துக் கொண்டு வெளியில் வரக்கூடாது. கணவனுக்குப்பின் உறங்கி கணவனுக்கு முன் எழுந்திருக்க வேண்டும். எழுந்து முகம் கேசம் இவைகளைத் திருத்திக்கொண்டு திலகம் அணிந்து பின்னர் கணவனை மெதுவாக எழுப்பவேண்டும். வீணை முதலிய வாத்யங்களை வாசித்தோ. கீர்த்தனைகளைப்பாடியோ எழுப்பலாம். அதட்டியோ சுச்சலிட்டோ எழுப்பக்கூடாது. எழுந்தபின் இருவருமாக சிறிது நேரம் பகவன் நாமஸங்கீர்த்தனம் செய்யலாம். அல்லது கேஸட்கள் போட்டுக் கேட்கலாம்.

காலையில் தெருவாசலை பெருக்கி சாணம் தெளித்து அரிசிமாவினால் கோலம் போடவேண்டும். எவ்வளவு வேலைக் காரர்கள் இருந்தாலும், இந்த காரியத்தை வீட்டின் தலைவியே செய்யவேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

புருஷர்கள் எப்படி வேலைக்காரனைவைத்து ஸந்தியாவந்தனம் செய்யச் சொல்லக் கூடாதோ அவ்வாறே தான் பெண்கள் வாசல் தெளிப்பது பதிக்கு ஸேவை செய்வது இதற்கெல்லாம் வேலைக்காரர்களை நியமிக்கலாகாது. இவ்வாறு செயல்படுபவர்களுக்கு தீர்க்க ஸௌமங்கல்யமும் நல்ல ஆரோக்யமும் ஏற்படும்.

தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்று ஒருவர் அடையவேண்டியவை வரிசைப் படுத்தி கூறப்பட்டுள்ளது.

தர்மம் முதலில் வைக்கப்பட்டுள்ளது. அவரவர் தர்மத்தை அவரவர் அனுஷ்டிக்க வேண்டும். இல்லறம் அல்லது நல்லறம் அன்று. சதிபதிகள் அறத்தின்படி வாழ்வதையே இல்லறம் என்கிறோம்.

இந்த இல்லறம் எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதை அடுத்த இதழில்பார்ப்போம். இக்கட்டுரைப்பற்றிய இல்லத்தரசிகளின் கருத்துக்களை ஆசிரியர் குழுவுக்கு எழுதுங்கள்.

சுபம் **தொடரும்**

வடமொழி அகராதி - 4

அபே[1]க்ஷா - விருப்பம், தேவை, ஆலோசித்தல், கவனம்
அப்[1]ரிய - பிடிக்காத, பிரியமில்லாத
அப்[1]ரௌட[4] - கர்வமில்லாத, ஸாதுவான, வளர்ச்சியடையாத
அப்ஸரஸ் - தேவஸ்த்ரீ, கந்தர்வ ஸ்த்ரீ
அப[3]த்[3]த[4] - சுதந்திரமான, பொருளற்ற
அப[3]ல - பலமில்லாத, பாதுகாப்பு இல்லாத
அப[3]லா - ஸ்த்ரீ, பெண்
அப்[3]ஜ[3]ஃ - சங்கு, சந்திரன், ஒருவகை மரம், தேவதைகளின் மருத்துவரான தன்வந்த்ரி
அப்[3]ஜம் - தாமரை, ஓர் எண் (100 கோடி)
அப்[3]த[3]ஃ - மேகம், ஆண்டு, ஒரு மலையின் பெயர்
அப்[3]தி[4]ஃ - கடல், ஏரி, குளம்
அப[4]யம் - பயமின்மை, பாதுகாப்பு
அபா[4]வஃ - இல்லாமை, தேவைப்படுதல் முற்றிலும் அழிவு, சூன்யம்
அபி[4] - திசையை நோக்கி, ஆக, ஒன்றிற்கெதிராக, மேலே, மீது, அதிகமான, வெகு. வினைச் சொற்களுடனும் பெயர் சொற்களுடனும் முன்சேர்க்கப்படும் வேற்றுமை உருபு
அபி[4]க்[2]ஷா - பார்க்க, சொல்ல, கூப்பிட
அபி[4]கம்ய - அருகில் சென்று, அடைந்து
அபி[4]சா[1]ரஃ - மந்திர தந்திரங்கள் மூலம் கெடுதி செய்தல்
அபி[4]ஜ[3]நஃ - குடும்பம், வம்சம் முன்னோர்களின் வாழ்விடம்
அபி[4]ஜித்[1] - விஷ்ணு, நக்ஷத்திரத்தின் பெயர், (நடுப்பகலிற்குமுன் 24 நிமிடம், பின் 24 நிமிடம் இருக்கும் காலம் ''அபிஜித் முகூர்த்தம்'' எனப்படும்.)
அபி[4]க்ஞ - அறிவுடைய, ஸாமர்த்யமுள்ள
அபி[4]ஜ்ஞாநம் - அடையாளம், ஞாபகம், குறி
அபி[4]தா[4]நம் - பெயர், சொல், சப்தம்
அபி[4]நந்த[3]நம் - மகிழ்ச்சியடைதல், விருப்பம்
அபி[4]நயஃ - நடித்தல், அபிநயம் (நாட்டியத்தில்)
அபி[4]நவ - முற்றிலும்புதிய, மிகவும் இளமை
அபி[4]ப்[1]ராயஃ - குறிக்கோள், உத்தேசம், லக்ஷ்யம்
அபி[4]மாநஃ - பெருமை, ஆசை, எண்ணம்.
அபி[4]ரம - ஆனந்தமடைய, த்ருப்தி அடைய செய்ய
அபி[4]ருசிஃ - பெண், ஆசை, உருசி, மகிழ்ச்சி
அபி[4]லாஷஃ - விருப்பம், பற்றுதல், காதல்
அபி[4]வாத[3]ஃ
அபி[4]வாத[3]நம் } - நமஸ்காரம் செய்தல், பெரியோரை சிறியோர் வணங்குதல், குருவை சீடன் வணங்குதல்
அபி4ஷேகஃ - அபிஷேகம் செய்தல், அரசன் அல்லது தேவதா மூர்த்திகளை அபிஷேக மூலம் பிரதிஷ்டை செய்தல்
அபீ[4]க்ஷ்ணம் - அடிக்கடி, தொடர்ந்து, மிக அதிகமாக

அபீப்ஸித
அபீஷ்ட - இச்சைப்பட்ட,விரும்பிய

அப்[4]யங்க[3]ः
அப்[4]யஞ்ஜனம் - எண்ணெய் சரீரத்தில் தேய்த்தல்

அப்[4]யந்தரம் - ஒரு வஸ்துவின் நடு எல்லது உட்பகுதி, இடைவேளை, இடைவெளி

அப்[4]யாக[3]தः - அருகில் வந்துள்ளவர், விருந்தாளியாக வந்துள்ளவர்.

அப்[4]யாஸः - திரும்பத் திரும்பச் செய்தல் அல்லது சொல்லுதல், பழக்கம், பயிற்சி, திரும்பத் திரும்பப் படித்தல்.

அப்[4]யுத[3]யः - ஸூர்யன், சந்திரன் முதலிய கோள்களின் உதயம், உயர்வு, க்ஷேமம், உத்ஸவம், ஆரம்பம்

அப்[4]ரம் - மேகம், வாயு மண்டலம், ஆகாயம் அப்ரகம், பூஜ்யம்

அமரः - தேவன், தேவதை, பாதரஸம், பொன், எண் - 33

அமர்ஷ - பொறுமையில்லாத, கோபத்துடன் கூடிய

அமாத்யः - மந்திரி

அமித - மிதமில்லாத, அளவு கடந்த

அமுத்ர - அங்கு, அங்கே மேலே, பரலோகத்தில்

அம்ருத - சாவில்லாத, அழிவற்ற

அம்ருதம் - சாவின்மை, அழிவின்மை, மோக்ஷம் ஸ்வர்கம், அம்ருதம், ஜலம், யாகஶேஷம்

அம்ருதாம்ஶுः - சந்திரன்

அமோக[4] - பிசகாத, பயனுள்ள

அம்ப[3]ரம் - ஆகாயம், துணி, உடை, ஒரு வகை-வாசனைப் பொருள், அப்ரகம்

அம்பா[3] - தாய், பார்வதீ

அம்பு[3] - தண்ணீர்

அம்பு[3]ஜः - சந்த்ரன், கற்பூரம், ஸாரஸ பக்ஷி, சங்கு

அம்பு[3]ஜம் - தாமரை, இந்தரனின் வஜ்ராயுதம்

அம்ப[3]ஸ் - தண்ணீர், ஆகாயம்

அம்ல - புளிப்பான, புளித்த

அயனம் - நடத்தல் செல்லுதல், வழி, பாதை, இடம், வீடு, ஸூர்யனின் பாதை, உத்தராயணம், தக்ஷிணாயனம்

அயः - இரும்பு, எஃகு, தங்கம், (பொதுவாக) உலோகம்

அயி - அன்போடடித்தல்

அயெ - ஏய், ஓ, (ஆச்சர்யமும் குறிக்கும்)

அயுதம் - எண் பத்தாயிரம் (10,000)

அயோத்[4]யா - யாராலும் வெல்லப்ட முடியாத அயோத்தி நகரம்

அய் - செல்ல

அரணிः - வள்ளிக்கட்டை மேல் அரசு மரக்கட்டையை பொருத்தி அக்னியை உண்டாக்கும்

அரணீ - அரணி ஸூரியன், அக்னி, சிக்கிமுக்கிகல்

அரண்யம்
அரண்யகம் - காடு

அரதிः - மகிழ்ச்சியின்மை, துக்கம், பீடை, கவலை

(தொடரும்)

இந்த மாதப் ப்ரபலம்



பெயர்: A.R. சௌமிய வாசுதேவபட்டாச்சார்

தகப்பனார் பெயர்: ரங்கஸ்வாமி பட்டாச்சார்

தாயார் பெயர்: சௌந்தரவல்லி

பிறந்த தேதி: சாதாரண பங்குனி 3 ம் தேதி (19.3.1911) சித்திரை

படிப்பு: கர்ஷணாதி ப்ரதிஷ்டாந்தம்

தெரிந்த மொழி: தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், கிரந்தம்

ஆசார்யன்: தகப்பனார் ஸ்ரீ உ.வே. ரங்கஸ்வாமி பட்டாச்சார், ஸ்ரீ உ.வே. ஸ்ரீதர பட்டாசசார், திருக்கோஷ்டியூர், ஸ்ரீ உ.வே. அலங்கார பட்டாச்சார், ஸ்ரீவில்லிபுத்தூர்

ஆற்றிய தொண்டுகள்: பல மாணவர்களுக்கு ஆகமத்தை போதித்துள்ளார். (அவர்களில் பலர் வெளிநாடு சென்று வந்துள்ளனர்) பல சர்ச்சைக்குரிய ஆகம விஷயங்களுக்கு தக்க சான்றுகளுடன் விளக்கி பல ஸம் ப்ரே கரணங்களைவைகானஸ ஸாஸ்த்ர! விதியிலிருந்து சற்றும் பிறழாகமல் இருக்குமாறு செய்து வருகின்றார்.

பெற்றுள்ள விருது: ''ஆகம பிரதிஷ்டாரத்னம்''

தலைமையேற்று நடத்திய ஸம்ப்ரோக்ஷணங்கள்: 100 க்கு மேல்

தலைமையேற்று நடத்திய மகா யக்ஞங்கள்: 50 க்கும் மேல்

தலைமையேற்று நடத்திய ஸுதர்சன ஹோமங்கள்: நூற்றுக்கணக்கில்

கைங்கர்யம் செய்த திவ்ய தேசங்கள், மற்றும், புராதனமான ஸ்தலங்கள்: திருக்கோஷ்டியூர் ஸ்ரீசௌம்ய நாராயணப் பெருமாள் சன்னதியில் சுமார் 60 வருடங்களுக்கு மேலாக சன்னதி கைங்கர்யம், உத்ஸவாதிகள், ஸம்ப்ரோக்ஷணங்கள், மஹாயக்ஞங்களுக்குப் ப்ரதான ஆசார்யராகவும் இருந்து சிறப்பித்துள்ளார்.

அழகர் கோயில், திருப்புல்லாணி, காரைக்கால், கபிஸ்தலம், அன்பில், தஞ்சாவூர், மதுரை கூடலழகர்ஸன்னதி , திருக்குறுங்குடி ஆகிய திவ்ய தேசங்களில் ஸம்ப்ரோக்ஷணங்களில், ப்ரதான ஆசார்யராகவும், ருத்விக்காகவும் பல புராதன ஸ்தலங்களிலும் நடைபெற்ற பிரதிஷ்டைகளிலும் கலந்துகொண்டுள்ளார்.

குடும்பத்தைப் பற்றி: தர்ம பத்னிகள் Late ஸௌ. ஜானகி, ஸௌ S. சீதாலக்ஷ்மி

குமாரர்கள்: 1. A.S.V. ரங்கராஜ பட்டாச்சார் - இந்த ஸ்வாமி திருப்புல்லாணி, அழகர்கோவில் உட்பட பல திவ்யதேசங்களில் ப்ருகஸ்பதியாக எழுந்தருளி கைங்ர்யம் செய்து வருகிறார்.

2. A.S.V. வெங்கட்ரமணி பட்டாச்சார்

முகவரி : நெ.71, சன்னதி தெரு, திருக்கோஷ்டியூர். சிவகங்கை Dt.

வாசகர் கடிதம்

நமது ''வைகானஸம்'' பத்திரிகை தொடங்கி 14 மலர்கள் வெளியிடப் பட்டுள்ளது. இந்த 14 மலர்களில் நமக்கு கிடைத்த விபரங்கள்:

1. வைகானஸ க்ருஹ்ய சூத்திரத்தில் கண்டுள்ள ஸம்ஸ்காரங்களைப் பற்றி விரிவாக டாக்டர் முத்துபட்டர் அவர்கள் எழுதியுள்ள ஸம்ஸ்காரங்கள் விளக்கங்கள், 2. புருஷசூக்தத்திற்கு ஆசிரியர் ஸ்ரீ பார்த்தசாரதி பட்டாச்சார் அவர்கள் எழுதி வரும் விரிவுரை, 3. மணமாலை - பகுதி மூலமாக 100க்கு மேற்பட்ட வதூ - வரன்கள் விபரங்கள் இதன் மூலம் அநேக திருமணங்கள் நடந்துள்ளன, 4. தமிழ்நாட்டின் மூலை முடுக்குகள் நகரந்தனில் உள்ள நம் குல ஸ்வாமிகளின் முகவரிகள் (200 க்கு மேற்பட்டவை), 5. பஞ்சாங்க ஸங்கிரஹம் மற்றும் இராசி பலன்கள், 6. ஸ்ரீவைகானஸ ஆகம சந்தேகங்களுக்கு விரிவான பதிலளிக்கக்கூடிய கேள்வி - பதில்கள், 7. திவ்ய தேசம், 8. மருத்துவம், 9. மணி ஓசை, 10. வடமொழி அகராதி, 11. தையற் கலை, 12. பிரபலமானவர்கள் பற்றிய விபரங்கள், 13. சிறுவர் பகுதி, 14. குறுக்கெழுத்துப் பரிசுப் போட்டி, 15. த்வாதஸமாஸார்ச்சனம்.

இத்தனை பகுதிகளைத் தன்னுள்ளே வைத்து 36 பக்கங்களைக் கொண்ட பத்திரிகை மிகக்குறைவான விலைக்கு வழங்கப்படுகிறது. நம் குல ஸ்வாமிகளின் நன்மையை மட்டும் கருத்தில் கொண்டு லாபம் ஈட்டும் எண்ணம் இல்லாமல் பத்திரிகை நடத்தப்படுவது AKS டிரஸ்டின் மகத்தான சேவையாகும்.

அனைத்து ஸ்ரீ வைகானஸர்களும் இதைப்போற்றி பத்திரிகைச் சந்தாதாரராக சேரவேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இதன் ஆசிரியர், இணை ஆசிரியர் மற்றும் டிரஸ்டின் நிர்வாகஸ்தர் களுக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த பாராட்டுக்கள்.

ஸ்ரீ R. திருவேங்கடத்தான்பட்டாச்சார், பெரியகுளம்.

நம் பத்திரிகையில் வரும் திவ்யதேசங்கள் பற்றிய கட்டுரை மிகவும் பயனுள்ள தாக இருக்கிறது. அத்துடன் அறிமுக ஸ்தலங்கள் என்னும் தலைப்பில் மற்ற சன்னிதிகளை பற்றியும் ப்ரசுரித்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

ஸ்ரீ K.V. நரசிம்ம பட்டாச்சார், வாணியம்பாடி.

நமது பத்திரிக்கை அனைத்து வைகானஸ குலஸ்வாமிகளுக்கும், இளைஞர்களுக்கும் மிகவும் உபயோகமாக உள்ளது. தங்கள் கைங்கர்யம் மேலும் சிறக்க வாழ்த்துக்கள்.

ஸ்ரீ T.R. ராமஸ்வாமி பட்டாச்சார், திருச்செங்கோடு.

நம் பத்திரிக்கையில் வெளியாகும் அனைத்து விஷயங்களும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. சுபநிகழ்ச்சிகள், மணிஓசை, ததீயாராதனம் போன்ற விஷயங்கள் மிகவும் அருமையாக இருந்தன.

ஸ்ரீமதி சுஜாதா ரங்கராஜன், கிருஷ்ணகிரி.

நம் பத்திரிக்கையில் பெண்களுக்கென்று ஒரு கட்டுரை வெளியாக உள்ளதை அறிந்து பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன். உங்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றிகள்.

செல்வி R. ஸ்ரீமதி, வாணாதிராஜபுரம்.

நமது பத்திரிக்கை அர்ச்சகர்களுக்கு ஒரு அரிய ப்ரசாதம். குறிப்பாக அர்ச்சகர் தேவை போன்ற அறிவிப்புகள் என்போன்ற அர்ச்சகர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. மணமாலை பகுதியும் மிகவும் உபயோகமாக உள்ளது.

ஸ்ரீ வெங்கடகிருஷ்ண பட்டாச்சார், மேல்புதுப்பாக்கம்.

தையற்கலை-4

செல்வி D. கல்யாணி, M.A.,B.Ed., தையல் கலை ஆசிரியை, மேற்கு மாம்பலம்

ஷிம்மி

அளவு எடுக்கும் விதம்

0 to 1 பாடி உயரம் + 1''
0 to 3 மார்புச் சுற்றளவு + 6/4''
0 to 6 ஷோல்டர் அகலம் + ¼''
8 to 6 ஷோல்டர் + ½''
0 to 9 பின்கழுத்து = 2''
0 to 10 முன்கழுத்து = 3''
3 to 11 ஹாம் ஹோல்
6 to 7 = ½"
12 to 2 = ½"
1 to 4 பாவாடை உயரம் + 1''
4 to 5 இரண்டு மார்பு சுற்றளவு (பாவாடை அகலம்)

மாதிரி அளவு படம்



மாதிரி அளவு

பாடி உயரம் = 6'' + 1'' = 7''
மார்பு சுற்றளவு = 18 + 6 = 2¾= 6''
ஷோல்டர் அகலம் = 3 ¾ + ¼ = 4''
ஷோல்டர் = 1 ½ + ½ = 2''
ஹாம் ஹோல் = 4''
முன்கழுத்து= 3, பின்கழுத்து = 2''
பாவாடை உயரம் 16 + 1 = 17''
பாவாடைஅகலம்= 24 +24 = 48/4 = 12

அளந்து மார்க் செய்யும் விதம்:

பாடியின் உயரம் (0 to 1) அளந்து ஒரு இன்ச் கூட்ட வேண்டும். மார்பு சுற்றளவுடன் 6 இன்சு கூட்டி 4 ஆல் வகுக்க வேண்டும். பாடி உயரம் இரண்டு மடங்காக எடுக்க வேண்டும். (7 + 7 = 14) மார்பு சுற்றளவு இண்டு மடங்காக (6 + 6 = 12) துணியில் இரண்டு உயரம் இரண்டு அகலம் மார்க்கு செய்து கோடு போட்டு வெட்ட வேண்டும். வெட்டிய துணியை நான்காக மடிக்க வேண்டும். இடதுபுறம் உயரத்தில் மடிப்பு இருக்க வேண்டும். அளந்து பார்த்தால் உயரம் 7 இன்ச்சு மார்பு சுற்றளவு 6 இன்ச் இருக்கும். ஷோல்டர் அகலம் எடுக்கும்போது (0 to 6) அளவு ஷிம்மியை நான்காக மடித்து கழுத்துப் புறத்தில் இருந்து ஷோல்டர் (0 to 6) அளந்து அதனுடன் ¼ இன்சு கூட்டி மார்க்கு செய்யவும். ஷோல்டரை அளந்து அதனுடன் ½ இன்ச் சேர்த்து (6 to 8) மார்க்கு செய்து வளைவாக வரையவும். (0 to 9) பின்கழுத்து (0 to 10) முன்கழுத்து மார்க்கு செய்யவும். (3 to 11) ஹாம் ஹோல் என்பது கையின் வளைவு. ஹாம் ஹோல் (3 to 11) 4 இன்சு மார்க்கு செய்து ஷோல்டர் அகலத்தில் இருந்து நெம்பர் 6 லிருந்து நெம்பர் 11 வரை வளைவாக வரையவும். (12 to 2) சைடு கிராஸ் (6 to 7) ஷோல்டர் கிராஸ் இரண்டும் ½ மார்க்கு செய்து கிராஸ் கோடு போடவும்.

வெட்டும் விதம்

சைடு கிராஸ் வெட்டவும். பின்பு ஹாம்ஹோல் வளைவு வெட்டி ஷோல்டர் கிராஸ் வெட்டவும். பின்கழுத்து, முன்கழுத்து தனித்தனியாக வெட்டவும்.

பாவாடை அளவு எடுத்து வெட்டும் விதம்

பாவாடை உயரத்தில் ஒரு இன்ச் மடிப்புக்காக சேர்க்கவும். பாவாடை அகலம் இரண்டு மார்புச் சுற்றளவு (24 +24 = 48) அளந்து மார்க்கு செய்து கோடு போட்டு வெட்டவும்.

பாடி தைக்கும் முறை

பின்புறத்தில் இரண்டாக மடித்து ஓப்பனுக்காக கோடு போட்டு வெட்டவும். ஷிம்மி வெட்டிய பிறகு மீதி உள்ள துணியில் ஒரு ஸ்கேல் அகலத்திற்கு நீளம் ஆறு இன்ச்சுக்கு மார்க் செய்து இரண்டு துண்டுகள் வெட்டிக் கொள்ளவும். ஓப்பன் வெட்டிய வலதுபுறத் துணியில் ஒரு ஸ்கேல் அகலத்திற்கு வெட்டி பட்டி துணியை மேல்புறத்தல் இருந்து சேர்த்து தைக்கவும். பட்டி துணி முழுவதுமாக உட்புறமாக மடித்து தைக்கவும். இதைப்போன்று இடது புறமும் சேர்த்து தைத்து உட்புறமாக மடித்து தைக்க வேண்டும். ஷோல்டர் முன்பக்கமும் பின்பக்கமும் சேர்த்து தைக்கவும். கழுத்தையும், ஹாம் ஹோலையும் மெல்லியதாக உருட்டி மடித்து தைக்கவும். பாடியின் இருபுறமும் சைடு சேர்த்து தைக்கவும். பாவாடையின் கீழ்ப்புறம் மடித்து தைக்கவும். பாவாடையின் சைடு சேர்த்து தைக்கவும். பாடியின் இடுப்பு சுற்றளவு அளந்துகொண்டு அதே அளவிற்கு பாவாடையின் மேற்புறத்தில் சிறுசிறு சுருக்கங்கள் வைத்து தைக்கவும். பாடியின் இடுப்புச் சுற்றளவும் பாவாடையின் சுற்றளவும் 18 ஒரே அளவாக இருக்கிறதா என்பதை அளந்துகொண்டு பாடியையும் பாவாடையையும் சேர்த்து தைக்கவும். **(தொடரும்)**

தெரிந்து கொள்வோம்

சீர்காழி பக்கத்தில் 11 திவ்ய தேசங்கள் அருகே அருகே அமைந் துள்ளன. அவற்றில் நடுநாயகமாக அமைந்துள்ளது திருவாலி திருநகரி. திருமங்கையாழ்வாரின் அவதார ஸ்தலம். வைஷ்ணவர்கள் இன்றும் ஆழ்வாரைக் கண்டு சொக்கி நிற்கும் அளவிற்கு ஆச்சரியமான திருமேனி மற்றும் அழகான திருமுகத்தை உடையவர். இதில் 11 பெருமாளும் பாஞ்சராத்திர சந்நிதி - திருவாலி திருநகரி மட்டும் வைகாநஸ சந்நிதி. தை அமாவாசை அன்று இந்த 11 பெருமாளும் ஒருசேர கருட ஸேவை யிலும், ஆழ்வார் அன்ன பக்ஷியிலும் எழுந்தருளியிருப்பார். அன்று காலை ஒவ்வோர் பெருமாளுக்கும் திருமஞ்சனம் முடிந்த பிறகு பல்லாக்கில் எழுந்தருளி பிறகு நடைபெறும் மங்களாசாசனத்தில் ஒவ்வோர் பெருமாளின் பாசுரம் பாடிய பின்பு அந்த பெருமாளின் திருபரிவட்டத்தை பாஞ்சராத்ர அர்ச்சகர் எடுத்து வர நமது வைகானஸ அர்ச்சகர் ஆழ்வாருக்கு சாத்துவார். அதன் பிறகு அந்தப் பெருமாளின் ஸ்ரீசடாரியை பாஞ்சராத்ர அர்ச்சகரே ஆழ்வாருக்கு சாதிப்பார். இப்படியாக 11 பெருமாளின் மங்களாசாசனம் முடிந்த பிறகு அந்தந்த பெருமாள் பல்லக்குகளிலிருந்து களைந்து கருட ஸேவை அலங்காரத்திற்கு ஆயத்த மாவார்கள். ஆனால் ஆழ்வார் வைகானஸ ஆகம முறைப்படி புண்ணிய ஹவாசன திருமஞ்சனம் (லகு) ஜலஸம்ப்ரோக்ஷணம் கண்டருளிய பிறகுதான் இரவு கருட ஸேவைக்கு அன்ன பட்சி வாகனத்தில் எழுந்தருளுவார். வைஷ்ணவர்கள் அதிகம் உள்ள இடத்தில் நமது வைகானஸத்திற்கு பெருமை படக்கூடிய விஷயம் இது. காலை மங்களாசாஸனமும் இரவு 11 பெருமாளின் கருட ஸேவையும் பார்க்க கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

தகவல். கே. பாலாஜி பட்டாச்சார், திருச்சித்ரகூடம் (சிதம்பரம்)

சிறுவர் பகுதி

உன்னை நீ அறிவாய்! -4

By தேனீ

உரையாடல் தொடர்கிறது....

பேரன் : அடேடே இவ்வளவு விஷயங்கள் இருக்கிறதா தாத்தா கோவில்ல செய்கிற கார்யங்கள் ஒவ்வொன்னுக்கும் ஒரு காரணம் இருக்கிறதா தாத்தா? ஆச்சர்யமாய் இருக்கிறதே!

தாத்தா : அதனால்தான் நம் விகனஸர் அருளிய ஆராதனை முறையை ந்ருஸிம்ஹ வாஜபேயி பஞ்சகண்ட திருவாராதனம் என 5 கண்டங்களில் விரிவாக, இப்படி இப்படித்தான் மந்திரம் சொல்லி பெருமாள் திருவாராதனத்தை செய்யவேண்டும் என கொடுத்துள்ளார்.

பஞ்சகண்டத்தை நன்றாக கற்றுக் கொண்டால்தான் சிறந்த அர்ச்சகனாகத் திகழ முடியும். பெருமாளும் ஸந்தோஷித்து எல்லோருக்கும் பரிபூரண க்ருபா கடாக்ஷத்தை அளிப்பார்.

பேரன் : க்ருபாகடாக்ஷம்னா என்ன தாத்தா?

தாத்தா : நல்ல கேள்வி கேட்டாயே! இப்படித்தான் ஸந்தேஹம் வந்தா உடனே கேட்கணும். பெருமாளுடைய கருணை மிகுந்த கடைக்கண் பார்வையை தான் க்ருபா கடாக்ஷம் என்கிறோம். உன் அம்மா உன்னை கனிவோட பார்க்கிறாளே அது போன்றதுதான் பெருமாளுடைய கடைக்கண் பார்வை. தாயார் என்று நாம் கொண்டாடுகிற ஸ்ரீமஹாலக்ஷ்மியின் க்ருபாகடாக்ஷத்திற்கு

பேரன் : கேட்க கேட்க ரொம்ப ஆனந்தமா இருக்கே. பஞ்ச என ஆரம்பிக்கும் பல விஷயங்கள் 5 தினம் கேட்டால்கூட முடியாதுபோல இருக்கே.

தாத்தா : பயப்படவேண்டாம். சிறுதுளி பெருவெள்ளம் போல, கொஞ்சம் கொஞ்சமாக கற்றுக்கொள். ஒரே நாள்ள எல்லாத்தையும் தெரிஞ்சு கொள்ள முடியாது. ஆர்வத்துடன் எல்லாவற்றையும் கவனித்து அனுபவஸ்தர்களான பெரியோர்களுடன் பேசும்போது பத்து புத்தகங்களில் படிக்கிற விஷயத்தை பத்து நிமிஷத்தில புரிந்து கொள்ளலாம். உன் ஆர்வத்தை பார்த்து சந்தோஷமா இருக்கு.

பேரன் : பஞ்சாங்கம், பஞ்சகவ்யம், பஞ்சபூதம் பஞ்சவாயு, பஞ்சபூதங்கள், பஞ்சாங்க பூஷணங்கள், பஞ்சபாத்திரம் வட்டில் பஞ்ச வாயுக்கள் பஞ்ச கண்ட திருவாராதனம் என சொன்னீர்கள். இன்னும் என்ன என்ன பஞ்சவஸ்துக்கள் சொல்லுங்கள் தாத்தா.

தாத்தா : பெருமாளுக்குரிய ஐந்து தினங்கள் மிகவும் விசேஷமானவை, திருவோணம் தேய்பிறைத்வாதசி வளர்பிறை

த்வாதசி, அமாவாஸ்யை, பௌர்ணமி விஷ்ணுபஞ்சதினங்கள் எனப்படும்.

பேரன் : அதேபோல தாயாருக்கு இருக்கிறதோ.

தாத்தா : இருக்கிறதே அவைதான் ஸ்ரீபஞ்சதினங்கள். பௌர்ணமி, அமாவாஸ்யை, சுக்லபக்ஷபஞ்சமி, கிருஷ்ணபக்ஷ பஞ்சமி உத்தரபல்குணீ தினங்கள் அன்று தாயாருக்கு செய்யும் திருவாராதனம் மிகவும் உகப்பானவை.

பேரன் : பஞ்சவட்டில் சொன்னீர்களே அதேபோல ப்ரதிஷ்டை யின் போது 5 குண்டங்களில் யாகம் என்கிறார்களே அது என்ன வென்று சொல்லுங்க தாத்தா.

தாத்தா : மிகவும் முக்கியமான விஷயத்தை கேட்டுள்ளாய் அவையே பஞ்சாக்னி குண்டங்கள். ஸப்யம், ஆஹவனீயம் அன்வாஹார்யம், கார்ஹபத்யம் ஆவஸத்யம் எனப்படுவது குண்டங்களின் அமைப்பு எப்படி? யாகம் செய்யும் மந்திரம் முறை எல்லாம் பின்னால் ஒருநாள் சொல்கிறேன். பெருமாளுக்கு பூசை செய்யுமுன் ஐந்து சுத்திகளை அர்ச்சகன் செய்யவேண்டும். அது என்ன தெரியுமா?

பேரன் : என்ன தாத்தா சொல்லுங்கள்?

தாத்தா : தேஹஸுத்தி - (தீர்த்தாமாடுதல், சந்த்யாவந்தனம், ப்ரஹ்ம யஜ்ஞம், ஔபாஸநம்)

ஸ்தான சுத்தி இடத்தை கர்பகிருஹத்தை சுத்தமாய் வைத்திருப்பது புண்யாஹவாசனம் செய்வது, பாத்ரசுத்தி வட்டில் முதலான பாத்திரங்களை சுத்தப்படுத்தி வைத்திருப்பது, ஆத்ம சுத்தி பூதஸுத்தி, ப்ரஹ்ம ந்யாஸம், ஆத்மஸமர்பண பாராயண மூலம் ஆத்மாவை சுத்தமாய் வைத்திருப்பது பேரசுத்தி தைலகாப்பு திருமஞ்சனம் மூலம் பெருமாளுடைய பேரங்களை சுத்தமாய் வைத்திருப்பது இவையாவும் பகவத் ஆராதனம் செய்பவனுக்கு தெரிந்திருக்கவேண்டும்.

தாத்தா : பஞ்சமூர்த்திகள் யாவர் தெரியுமா?

பேரன் : விஷ்ணு, புருஷன், ஸத்யன், அச்யுதன், அளிருத்தன் என்று முன்னரே சொல்லியுள்ளீர்களே.

தாத்தா : பலே! பலே! பஞ்சபேரம் என்ன சொல் பார்க்கலாம்.

பேரன் : என்ன தாத்தா நானா மறப்பேன்? த்ருவர், கௌதுகர், உத்ஸவர், ஸ்நபனர், பலிபேரர், சரிதானே.

தாத்தா : மிகச் சரியாகச் சொன்னாய்! நேரமாகிவிட்டது நீ போய் தூங்கு இன்னொரு நாள் உரையாடுவோம். (இருவரும் கலை கிறார்கள்)

(தொடரும்)

குறுக்கெழுத்துப் பரிசுப் போட்டி - 4



பெயர் : _____ சந்தா எண்: AKS

முகவரி : _____

_____

_____

பின்கோடு _____

இடமிருந்து வலம்

1. நம்மால் ஸுலபமாக பூஜிக்கப்படும் அவதாரம் (விக்ரகரூபீ)(7) ச்' விடுபட்டது.
2. தாமரை (4)
3. த்வஜாரோஹணத்திற்கு முன்பு செய்யப்படுவது (6)
4. இதற்காகத்தான் தேவாஸுராள் திருப்பாற்கடலை கடைந்தார்கள். (5)
5. மூன்றாவது வர்ணாஸ்ரம தர்மம் (ஸந்யாஸத்துக்கு முன்பாக) (7)

வலமிருந்து இடம்

6. திருக்கண்ணமுதின் மறுபெயர் (4)
7. பெருமாள் மத்ஸ்யம் முதலாக முக்யமான 10 ----- எடுத்தார் (5)
8. ஒரு நக்ஷத்ரம் (4)
9. திருவடி (3)

மேலிருந்து கீழ்

1. கோவிலில் கருடக் கொடியிறக்குதல் (6)
9. வதுவை வரன் கைப்பிடிக்கும் ஸமஸ்காரம் (7)
10. அக்ரணீ: (நம் வடமொழி அகராதியில் உள்ளது) (4)
11. தேர் (3)
12. வெற்றிலைபாக்கு (5)
13. செலவுக்கு எதிர்மறை (3)
14. பஞ்சாயுதங்களில் ஒன்று (5)
15. அன்னம் (3)
16. அங்குலீயகம் (நம் வ.அகராதியில் உள்ளது) (4)
17. இது எடுத்தால் தண்ணீர் குடிக்க வேண்டும் (3)

கீழிருந்து மேல்

5. குரங்கு (4)
15. ஸகரராஜனால் ரக்ஷிக்கப்பட்டதால் ஸமுத்ரத்துக்கு இப்பெயர் (4)
18. படுக்கை (4)

மேற்கண்ட குறுக்கெழுத்து கட்டத்தைப் பூர்த்தி செய்து வரும் 20ந் தேதிக்குள் எங்களுக்கு வந்து சேரும்படி அனுப்ப வேண்டும்.சந்தா எண்ணை கண்டிப்பாக குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.இந்த போட்டியில் சந்தாதாரர்கள் மட்டுமே கலந்து கொள்ள தகுதியானவர்கள். ஒருவருக்கு மேற்பட்டவர்கள் சரியானவிடையை அனுப்பியிருந்தால்குலுக்கல் முறையில் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்வு செய்யப்படுவார். வெற்றி பெற்றவருக்கு ரூ.100/- பரிசாக வழங்கப்படும் ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

வருட சந்தா ரூ.60/- இரண்டு வருட சந்தா ரூ.110/-

ஆயுள் (நிரந்தர) சந்தா ரூ.1001/-

A.K.S. பெயரில் D.D. அல்லது மனியார்டர் மூலமாக உங்கள் சந்தா தொகையை அனுப்பவும். D.D. சென்னையில் மாற்றத் தக்க வகையில் இருக்க வேண்டும்.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி
AKS Trust 24, எல்லையம்மன் கோவில் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-600 033.

சந்தா படிவம்

சந்தா அனுப்புபவரின் பெயர்: .....

முகவரி: .....

.....

.....

Pincode ..... Ph.No.(STDCode) .....

அனுப்பப்படும் தொகை: ரூபாய் 60 / 110 / 1001

வங்கியின் பெயர்.....

டி.டி.எண்./எம்.ஒ. ரசீது எண்.:.....தேதி:.....

குறுக்கெழுத்துப் பரிசுப் போட்டி3க்கானவிடை

1 ப	9 க	10 வ	11 த்	12 ஶ்ரீ	13 ஸ்	14 த்	15 ர	ம்
கா	ல்	ன	வ	ள	வ	ரு	க்ஷா	ன
2 ஸ்ரீ	ப	ம்	ஜா	க்	ய	வ	ப	தா
ர	ஸ்ரீ	ர்	ரோ	ரா	ம்	பே	ந்	த்
ன்	த்	க	ஹ	ம	வ்	ர	த	16 உ
[redacted]	ர	ல	ண	ம்	ய	ம்	ன	பா
ம்	ம்	3 பா	ம்	பு	க்	பு	ம்	8 க
ட	4 வி	க்	ர	ம	5 த	ர்	பா	ர்
6 மா	னா	17 தி	கா	ர	ம்	வி	யா	7 மா

சென்ற மாத இதழில் வெளியான குறுக்கெழுத்துப் போட்டி-3க் கான விடைகளை பலர் சரியாக எழுதியிருந்தனர். குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.100/- பரிசு பெறும் அத்ருஷ்டஶாலி செல்வி. **P.V. வஸுந்தரா**, வில்லிவாக்கம், சென்னை.

ஶ்ரீ வைகானஸமலர்

வைகானஸ	மலர்	அல்லவா
இதுவையம்	போற்றும்	இதழ் அல்லவா
இது	நமக்கொரு	புதையல் அல்லவா
ஒருமுறை	இந்த	இதழினை படிப்பதால்
இதயமும்	மகிழும்	அய்யா
வருவீர்	படிப்பீர்	நலமே நீர் பெறுவீர்
பாரதி	கண்ட	கண்ணனைப்போல
கம்பன்	கண்ட	ராமனைப்போல
ஆழ்வார்	கண்ட	அமுதனைப்போல
நானும்	கண்டேன்	வைகானஸனை

ஶ்ரீமதி. ராஜலக்ஷ்மி மணிவண்ணன், கடுக்கலூர்.

மணமாலை பகுதி விண்ணப்பப் படிவம்

விவாஹத்திற்கு இருக்கும் வது/வரன்களை, கீழ்க்கண்ட குறிப்புகளை பூர்த்தி செய்து அனுப்பினால் இந்தப் பகுதியில் பிரசுரிக்கப்படும். இந்த பகுதி முற்றிலும் வைகாநஸ குலத்தில் பிறந்தவர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

பெயர் ..... ஆண்/பெண்

பிறந்த தேதி ..... வயது (.....)

கோத்ரம் ..... நக்ஷத்திரம்.....

கல்வி தகுதி .....

வேலை ..... சம்பளம் .....

உயரம்..... இருக்கும் வீடு : (சொந்தம்/வாடகை)

தந்தை பெயர் .....

தந்தையின் வேலை .....

முகவரி .....

.....

.....

Pincode.....

Phone No. (STD Code).....

தேடும் வரன்/வதூ எப்படி வரவேண்டும் .....

குறிப்பு: தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு மட்டுமே மணமாலை பகுதியில் இந்த விளம்பரம் வெளியிடப்படும். விளம்பரக் கட்டணம் ஏதுமில்லை.

கையொப்பம்

Office Use

Srl.No. **Code:**

Age: **Sex:**

Entry on:

வெளியிட்டிருந்தோம். அந்த ப்ரகாரம் மஹாமேருவையும் குலபர்வதங்களையும் த்ரிலோக மண்டலத்தையும் வைத்து மேருவின் சிகரத்தில் தவன மலையை வைக்க வேண்டும். சுற்றி எட்டு குல பர்வதங்களின் மேல் 8 கந்தோதகம் பூரித்த கலசங்கள் வைக்கவேண்டும். மஹாமேருவின் முன்பாக பௌண்டரீகாக்னிகுண்டம் போட்டு அக்னிப்ரதிஷ்டைசெய்து பெருமாளை ஶயனம் செய்து ஸ்நபநத்ரவ்யங்களை மேருவை சுற்றிலும் வெளிப்பக்கம் வைத்து அனைத்து தேவதைகளையும் அர்ச்சிக்கவேணும்.

வஸந்தன், மன்மதன் இருவரையும் ஆவாஹனம் செய்து அர்ச்சிக்க வேண்டும். வைஷ்ணவம், விஷ்ணுஸூக்தம், புருஷஸூக்தம், ஸ்ரீஸூக்தங்கள் கூஷ்மாண்டம், ஜ்யாதி முதலானவை, ஸர்வதைவத்யம் ஆகிய மந்த்ரங்களை ஹோமம் செய்யவேண்டும். பிறகு, ராத்ரி ஶேஷம் ஆனதும் விடியற்காலையில் அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஸன்னிதிக்கு வந்து பெருமாளை 8 கந்தோதக கலஶங்களால் அபிஷேகம செய்து வஸ்த்ராதி அலங்காரம் செய்து தவனமாலைகள் எடுத்து பெருமாளுக்கு விஷ்ணுஸூக்தம் சொலலி சாற்றவேண்டியது. அனைத்து மூர்த்திகளுக்கும் பரிவாரங்களுக்கும் தவன மாலைகள் அந்தந்த மந்த்ரம் உச்சரித்து சாற்றவேண்டியது. பெருமாளை ஆஸ்தான மண்டபத்தில் ஏளப்பண்ணி தளிகை அமுது செய்து பௌண்டரீகாக்னியை அந்தஹோமம் செய்து நித்யாக்னியில் சேர்க்கவேண்டும், என ஸ்ரீப்ருகு மஹர்ஷி க்ரியாதிகாரத்தில் அருளுகிறார்.

வஸந்தோத்ஸவம்: சித்திரை மாதம் (முதல் ஆனிமாதம் மூல நக்ஷத்ரம் வரை) ப்ரதிதினம் பெருமாளுக்கு ஸுகந்தமான மாலைகள் சாற்றவேண்டும். ஶார்ங்கபாணியான எம்பெருமானுடைய மத்யாஹ்ன (உச்சிகால) ஆராதனம் ஆனதும் ஆஸ்தான மண்டபத்தில் எழுந்தருளப்பண்ணி கந்த தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து வஸ்த்ராதிகளால் அலங்கரித்து அந்தந்தக்காலத்தில் உண்டாகும் ஸுகந்தமான புஷ்பங்களால் பெருமாளை அர்ச்சித்து பாயஸம் முதலானவற்றை கண்டருளப்பண்ணவேண்டும். அலய ப்ரதக்ஷிணம் செய்வித்து பிறகு மா, பலா, வாழை ஆகிய கனிகளையும் பக்ஷணங்களையும் இளநீரையும் திருக்கண்டருளப்பண்ணி ஆசமநம் முகவாஸம் ஸமர்ப்பித்து பெருமாளை ஸ்வஸ்தானத்தில் ஏள்ளப் பண்ணவேணும். இவ்வாறே நித்யம் ஆனி பௌர்ணமி வரை செய்ய வேண்டும் என்கிறார் ஸ்ரீப்ருகுமஹர்ஷி.

தவனோத்ஸவம்: ப்ரகீர்ணாதிகாரத்திலும் 21 வது அத்யாயத்தில் ஸ்ரீப்ருகு மஹர்ஷி தவன உத்ஸவம் பற்றி அருளியுள்ளார்.

சித்ரா பௌர்ணமிக்கு முதல் நாள் இரவு பெருமாளுக்கு ரக்ஷாபந்தனம் செய்து வஸந்தன், காமன் (மன்மதன்) இருவரையும் அர்ச்சித்து பாயஸான்னம் திருக்கண்டருளப் பண்ணவேணும். பெருமாளுக்கு வலப்பக்கம் பீடத்தில் தவனமாலையை வைக்கவேணும்.

பௌர்ணமியன்று காலை பெருமாளை ப்ரணவத்தால் எழுப்பி திருமஞ்ஜனம் செய்து அர்ச்சித்து பெருமாளுக்கும் மற்ற பரிவார தேவதைகளுக்கும் உரிய மந்த்ரங்களைச் சொல்லி தவன மாலைகள் சாற்றவேண்டும்.

பெருமாள் க்ராம ப்ரதக்ஷிணம் உத்ஸவம் கண்டருளி ஆஸ்தான மண்டபத்தில் ஏள்ளப்பண்ணி தளிகை நிவேதனம், முகவாஸம் ஸமர்ப்பிக்கவேணும் என்கிறார் மஹர்ஷி.

அத்ரி மஹர்ஷியும் சித்ரா பௌர்ணமியன்று பெருமாளுக்கு அனைத்து விதமான நல்ல புஷ்பங்களையும், பழங்களையும் கண்டருளப் பண்ணவேணுமென்கிறார். கோயில் விமானம் சுற்றியும், ஆலயம் முழுவதும் புஷ்பங்களால் அலங்கரிக்கவேணும் என்கிறார்.

RDIS No.779/99 SRI VAIKANASAM REGD. No. TN/Chief-PMG-123/2000

விக்ரம வருஷ ஸ்ரீ வைகானஸ சுத்தவாக்கிய

சர்வமுகூர்த்த பஞ்சாங்கம்

☞ திருமணம், சீமந்தம், உபநயணம், க்ரஹப் ப்ரவேசம், கும்பாபிஷேகம் போன்ற நல்ல நாட்கள் வரும் சித்திரை 2000 முதல் கார்த்திகை 2001 (20 மாதங்கள்) வரை கொடுக்கப் பட்டுள்ளது.

☞ நீங்களே உங்கள் நட்சத்திரங்களுக்கு ஏற்ற நல்ல நாட்களை சுலபமாக தெரிந்து கொள்ளும் வகையில் அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.

☞ நட்சத்திரம் மற்றும் திதிகளுக்கு மணி-நிமிடம் கொடுக்கப் பட்டுள்ளது.

☞ குறைந்த விலையில் அதிகமான விஷயங்கள் கொண்ட ஒரே சர்வ முகூர்த்த பஞ்சாங்கம் இதுவே.

ஒரு பிரதியின் விலை ரூ.10/- மட்டும் (ஸ்ரீவைகானஸ குலஸ்வாமிகளுக்கு மட்டும்) தபால் செலவு ரூ.5/- சேர்த்து அனுப்பவும்.

தங்கள் தெளிவான முகவரியுடன் M.O. செய்யவும்.

கணித்து வெளியிடுபவர்:

SRYAS D. முரளி பட்டாச்சாரியார்

24, எல்லையம்மன் கோயில் தெரு,

மேற்கு மாம்பலம், சென்னை - 600 033. போன் : 044-4710036

Sri: ☎ 8552180

THANJAI MOORTHY

16, NORTH TANK SQUARE STREET,

TRIPLICANE, CHENNAI - 5.

எங்களிடம் 108 திவ்யதேசப்பெருமாள் படம், பெருமாள் படம் போட்ட மேக்னட், கீசெயின், பெருமாள் டாலர்கள், யந்த்ரங்கள், நவரத்ன மாலை, துளஸி மாலை, ஸ்படிக மாலை, நல்முத்துமாலை, திருமண் ஸ்டிக்கர், திருமண் பெட்டி, லேமினேஷன் செய்தபெருமாள் படங்கள் முதலானவை சகாயமான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

Edited by N.S. Parthasarathy Battachariar & D. Mohan Battachariar. *Printed at:* Guru Achagam, Triplicane,Chennai-600 005. *Published by:* **A K S Trust**, 24, Ellaiamman Koil Street, West Mambalam, Chennai - 600 033.